யில் அவருடைய தங்கப் பனை மரக்கொடி மூன்று கிளைகளுடன் அழகிய மேடையில் ப்ரகாசிக்கிறது. அது கிழக்திசைக்கு எல்லையாகத் தேவதைகளால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கப்பால் தங்கமயமான உதயகிரி காணப்படும். அதன் சிகரம் நூறு யோஜனை உயரமுள்ளதாக அழகிய மேடைகளுடன் ஸூர்யனைப் போல ப்ரகாசித்துக்கொண்டு அநேக தங்க மரங்களால் அலங்கரிக்கப்பட்டுத் தங்கமயமாக விளங்குகிறது. அங்கே ஒரு யோஜனை அகலமும் பத்து யோஜனை உயரமுமுள்ள ஸெளமனஸமென்ற தங்கச் சிகரமுண்டு. முன்பு மஹாவிஷ்ணு த்ரிவிக்ரமாவதாரமெடுத்தபொழுது பூமிக்குக் கிழக்கெல்லையாக இந்தச் சிகரத்தில் ஒரு அடியையும் மேற்கெல்லையாக ஸ்வர்ணமேருவென்ற மலைச்சிகரத்தில் ஓரடியையும் வைத்தார். ஸூர்யன் ஒவ்வொரு நாளும் ஜம்பூ த்வீபத்திற்கு வடபுறத்தைச் சுற்றி வரும்பொழுது ஸெளமனஸமென்ற சிகரத்தில் தங்கி, அப்பொழுது மேருவிற்குத் தெற்கிலுள்ளவர்களால் காணப்படுகிறார். அங்கே வைகானஸரென்றும் வாலகில்யரென்றும் சில மஹர்ஷிகள் ஸூர்ய காந்தியுடன் எப்பொழுதும் தபஸ்செய்து கொண்டிருக்கிறார்கள். உதயகிரியின் பக்கத்தில் ஸுதர்சனமென்ற த்வீபமுண்டு. எவனுடைய தேஜஸால் ஸகல ப்ராணிகளுக்கும் பதார்த்தங்களைப் பார்க்கும் சக்தியுண்டாகிறதோ அந்த ஸூர்யனுடைய தேஜஸ் இந்த த்வீபத்தில் விசேஷமாக ப்ரகாசிக்கிறது. அங்குள்ள மலைகளிலும் வனங்களிலும் காடுகளிலும் குகைகளிலும் ஆறுகளிலும் ராவணனையும் ஸீதையையும் தேடுங்கள். ஸூர்யகிரணமும் உதயகிரியின் காந்தியும் சேர்ந்து கிழக்கில் சிவப்பாகத் தோன்றுகிறபடியால், காலை ஸந்தியையென்று சொல்லப்படுகிறது. இந்த உதயகிரி பூமிக்கும் ப்ரபஞ்சத்திற்கும் த்வாரமாகவும், ஸூர்யனுடைய ஸஞ்சாரத்திற்கு ஆரம்ப ஸ்தானமாகவும் ப்ரஹ்மாவால் முன்பு ஏற்படுத்தப்பட்டபடியால் கிழக்குத் திசையென்று பெயருண்டாயிற்று. இதுவரையிலும் சொல்லிவந்த இடங்களில் ஒவ்வொன்றிலும் ராவணனையும் ஸீதையையும் வெகு ஜாக்ரதையாகத் தேடுங்கள். வானரர்கள் செல்லக்கூடிய எல்லை இதே. இதற்கப்பால் தேவதைகள் ஸஞ்சரிக்குமிடம் ஆரம்பிக்கிறது. அங்கே ஸூர்ய சந்த்ரர்களின் ப்ரகாசமில்லை, க்ராமம் நகரம் தேசமென்ற பிரிவுகளின்றி ஒரே இருட்டால் மூடப்பட்டிருக்கும். அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் உதயகிரி வரையில் போய் ஸீதையையும் ராவணனிருக்குமிடத்தையும் தேடிக் கண்டுபிடித்து ஒரு மாஸத்திற்குள் இங்கே வந்து சேரவேண்டும். தவறினால் விசாரணையில்லாமல் கொல்வேன்.

இந்த்ரனுக்கு ப்ரியமான திசையில் நான் சொன்னவிடங்களி லும் மற்றவைகளிலும் நன்றாகத் தேடிக் காரியத்தை முடித்துக் கொண்டு வந்து சேருங்கள். பிறகு நீங்கள் உள்ள வரையில் ஸகல ஸுகங்களையும் அநுபவிக்கலா” மென்று கட்டளையிட்டான்.

ஸர்க்கம் 41.

தெற்கில் தேட அனுப்பினது.

பிறகு அக்னி குமாரனான நீலனையும் வாயுபுத்ரனான ஹநுமானை யும் ப்ரஹ்மபுத்ரனான ஜாம்பவானையும், ஸுஹோத்ரன் சாரரி சரகுல் மன் கஜன் கவாக்ஷன் கவயன் ஸுஷேணன் (தாரையின் தகப்பன் லல) ரிஷபன் மைந்தன் த்விவிதன் விஜயன் கந்தமாதனன் உல்காமு கன் அஸங்கன் (அக்னிபுத்ரர்கள்) அங்கதன் முதலிய வானர வீரர் களையும் பார்த்து ஸுக்ரீவன் “நீங்கள் வெகுவேகமாகச் செல்லும் பெரிய ஸைன்யத்துடன் தெற்குத் திசையில் போய்த் தேடுங்கள். பல சிகரங்களுடனும் காடு செடி புதர்களுடனும் விளங்கும் விந்த்ய மலையையும், கொடிய கருநாகங்கள் நிறைந்த நாமதையென்ற ஆழ மான நதியையும், கோதாவரி க்ருஷ்ணவேணி வரதா மேகலை உத்கலை யென்ற நதிகளையும், தசார்ண தேசத்திலுள்ள நகரங்களையும், அசவ வந்தி அவந்தி விதர்ப்பம் ரிஷிகம் மாஹிஷகம் வங்கம் களிங்கம் கௌசிகம் தண்டகாரண்யம் ஆந்த்ரம் புண்ட்ரம் சோளம் பாண்ட்யம் கேரளம் முதலிய தேசங்களையும் வெகு ஜாக்ரதையாய்த் தேடுங்கள். பிறகு அயோமுகமென்று ஓர் மலை தோன்றும். அது பல தாதுக்களா லும் விசித்ரமான சிகரங்களாலும் சந்தனக்காடுகளாலும் விளங்குகி றது. பிறகு தெளிந்த ஜலத்துடன் விளங்கும் காவேரியென்ற புண்யநதி காணப்படும். அங்கே அப்ஸரஸ்கள் எப்பொழுதும் ஸஞ்சரிப்பார் கள். மலய பர்வதத்தின் சிகரத்தில் தேஜஸால் ஸூர்யனைப்போல் ஜ்வலிக்கும் அகஸ்த்ய மஹாருஷியைக் காண்பீர்கள். பிறகு அவரை நமஸ்கரித்து உத்தரவு பெற்றுக்கொண்டு முதலைகள் நிறைந்த தாம் ரபர்ணிநதியைத் தாண்டவேண்டும் விசித்ரமான பரிமளங்களைப் பூசிக்கொண்டு தன் நாயகனைச் சேரப்போகும் யௌவன ஸ்த்ரீயைப் போல இந்த நதிக்கரைகளில் சந்தனக்காடுகளால் பரிமளம் நிறை ந்து ஸமுத்ர ராஜனைச் சேருகிறது. பிறகு முத்து நவரத்னங்கள் முதலிய விலையுயர்ந்த பதார்த்தங்களுக்கு இருப்பிடமான பாண்ட்ய

ராஜாக்களின் தங்கமயமான ராஜதானி தோன்றும் பிறகு ஸமுத்ரக் கரை சேர்ந்து, மஹேந்த்ர மலையைக் காண்பீர்கள். அகஸ்த்ய மஹரிஷி பின்வரும் காரியங்களை உத்தேசித்து அதை ஸமுத்ரத்தில் வைத்தார் அது பல காடுகளுடன் தங்கமயமாகத் தேவ யக்ஷ வித்த சாரண அப்ஸரஸ ரிஷிகணங்களால் எப்பொழுதும் நிறைந்திருக்கும். பர்வகாலங்களில் ஸமுத்ர ஸ்நானம் செய்யத் தேவேந்த்ரன் அந்தப் புண்யதீர்த்தத்திற்கு வருவான்.

அதற்கு நூறு யோஜனைக்கப்பால் மனுஷ்யர்கள் போகமுடியாத லங்கைத் தீவு காணப்படும் அங்கே ஸீதையை வெகு ஜாக்ரதையாய்த் தேடவேண்டியது துராத்மாவான ராவணனென்ற நமது சத்ருவின் ராஜதானி அது தான். அவன் தேவேந்த்ரனுக்கு ஸமமான காந்தியுடன் ராக்ஷஸாதிபதியாய் அங்கே விளங்குகிறான். அந்தத் தெற்கு ஸமுத்ரத்தில் அங்காரகாவென்ற ஓர் ராக்ஷஸியிருக்கிறாள் அவள் ப்ராணிகளின் நிழலைப் பிடித்து அவர்களைக் கொன்று தின்கிறாள் ஆகையால் அங்கே ஜாக்ரதையாய்ச் செல்லுங்கள் இவ்விடங்களைப்பற்றி எனக்குள்ள ஸம்சயங்கள் நீங்கும்படி அவைகளை நன்றாய்த் தேடுங்கள்

அதற்குத் தெற்கில் நூறு யோஜனை தூரத்தில் புஷ்பிதகமென்ற ஒரு மலையுண்டு. அது தேவகணங்கள் ஸஞ்சரிக்குமிடம். பல சிகரங்களுடன் ஆகாசத்தை அளாவிக்கொண்டு சந்த்ர ஸூர்யர்களைப்போல் ப்ரகாசிக்கிறது அதில் தங்கமயமான ஒரு சிகரம் ஸூர்யனுக்குத் தங்குமிடம். வெள்ளிமயமான மற்றொரு சிகரம் சந்த்ரனுக்குத் தங்குமிடம் நன்றியற்றவர்களும் கொடியவர்களும் நாஸ்திகர்களும் அதைக் காணமுடியாது. அதை நமஸ்கரித்துப் பூஜித்து உள்ளே ஜாக்ரதையாகத் தேடுங்கள், அதற்கப்பால் பதினைந்து யோசனை தூரத்தில் ஸூர்யவானென்ற மலை தோன்றும் அங்கே போகும் வழி வெகு கஷ்டமானது. அதற்கப்பால் வைத்யுதமென்ற மலை எக்காலத்திலும் எவ்வித புஷ்பங்களாலும் பழங்களாலும் விளங்குகிறது அங்குள்ள உத்தமமான வேர்களையும் கிழங்குகளையும் பழங்களையும் தின்று, அம்ருதம்போன்ற தேனைக் குடித்து அப்புறம் போனால் குஞ்ஜரமென்ற அழகான மலை தோன்றும். அங்கே ஒரு யோசனை அகலமும் பத்து யோசனை நீளமுமுள்ள ஒரு ஆச்ரமத்தை அகஸ்த்ய மஹாரிஷிக்கு விச்வகர்மா அமைத்திருக்கிறான். அது தங்கமயமாய்ப் பல ரத்னங்களால் விளங்குகிறது. அந்த மலையில் போகவதியென்ற மஹாநாகங்களுடைய ராஜதானி

விளங்குகிறது. அது விசாலமான அரண்களாலும கூாமையான பலலுகளையும கொடிய விஷத்தையுமுடைய கோரமான ஸாபபஙக ளாலும காககபபடுகிறது அஙகே வாஸுகியென்ற ஸாபபராஜன வஸிககிறா அதறகு ஸமீபததிலுளள பல தேசஙகள ரஹஸயமா யிருககின்றன அஙகே ஜாககரதையுடன தேடுஙகள

அதறகபபால ரிஷபமென்ற மலை காளையின ரூபததுடன தோன றும அதில பல ரதனஙகளும, கோரோசனை தாமரையிதழ குஙகுமம பசசிலை மரததிலை, அகனி முதலியவைகளின நிறததையுடைய பல வித சநதனஙகளுமுணடாகின்றன. நீஙகள அவைகளைப பாாதது ஆசைகொணடு தொடககூடாது ரோஹிதாகளென்ற கோரமான கநதாவாகள அவைகளுககு காவல சைலூஷன கராமிணி சிகருசப் ரன பபருவென்று ஸூாய தேஜஸுளள ஐநது தலைவாகள அவா களுககுணடு மஹா புணயவானகளும ஸூாய சநதர அகனிகளைப போன்ற தேஜஸுடன அஙகே வஸிககிறாகள ஸ்வாககததை அடைநதவாகளும அஙகேயிருபபதுணடு.

அதறகபபால உஙகளால போகமுடியாது பயஙகரமான பிதரு லோகமும கோரமான இருளால சூழபபடட யமனுடைய ராஜதானியு மிருககின்றன நீஙகள அதுவரையில போயத தேடமுடியும இதுவரையில நான சொன்னவிடஙகளையும இன்னும அஙகே காணப படும மறறவிடஙகளையும ஜாககரதையாயத தேடி ஜானகியைக கணடு பிடிககவேணடும எவன ஒரு மாஸததிறகுள ஸீதையைக் கண் டேனென்ற ஸமாசாரததை என்னிடததில வநது சொலலுகிறானோ அவன எனககு ஸமமான போகஙகளையும ஐசவாயஙகளையும அனுப விததுககொணடு ஸுகமாகக காலஙகழிபபான அவன உயிரைக காடடிலும எனககு பரியமானவன. அவனைவிட எனககு பரியமான வனிலலை அவன எவவளவு குறறஙகளைச செயதாலும அருமை மையான பநதுவைபபோல நடததுவேன. நீஙகள அளவறற பராககரமமுளளவாகள உததம குணஙகளால அலஙகரிககபபடட குலஙகளில பிறநதவாகள ஆகையால ஜானகியைத தேடிககணடு பிடிகக ஸகல பரயதனஙகளையும குறைவிலலாமல செயயவேணடு” மென்று கூடடளையிடடான.

ஸர்க்கம 42.

மேற்கில் தேட அனுப்பினது.

பிறகு தாரையின தகபபனும தன மாமனுமான ஸுஷேணனை வணஙகிக கைகூபபி "மரீசிபுதரரான வானரசரேஷட! இநதர னைபபோலும கருடனைப போலும நீ தேஜஸை உடையவா உத்தம புததியாலும பராகரமததாலும அலஙகரிக்கபப டவா. மறற மரீசி புதராகளுடனும ரிஷிகுமாராகளான வானாகளுடனும புறபபட்டு இரணடு லக்ஷம ஸைனயங்களுடனும மேறகில ஸீதையைத தேட வேண்டும. ஸுராஷ்டரம பாஹ்லிகம மயூரம பீமம முதலிய தேசங்களையும, ஜனங்கள நிறைநத விசாலமான நகரங்களையும நாட்டுபபுறங்களையும, தாழை முதலிய அபூரவ புஷ்பஙகளால வாஸனை வீசும காடுகளையும பாாபபீாகள. மேலும மேறகில் ஓடும புண்ய நதிகளையும தபஸ்விகள வஸிககும மலைகளையும காடுகளையும வனங் களையும, ஜலம மரம செடி கொடிகளில்லாத பாலைவனத்தையும; உயர்நத தனிபபாறைகளையும, மலைகளால சூழபபட்டு போகமுடி யாத பரதேசங்களையும நனறுகப பரிசோதிததுப் பாருங்கள். அதற் கபபால பயஙகரமான ஜநதுககளாலும மலைபோனற அலைகளாலும் விளஙகும மேறகுக கடல காணபபடும அங்கே தாழைக காடுகளி லும பசசிலைக காடுகளிலும தெனனநதோபபுகளிலும ஸநதோஷமா கது திரிநது ஸீதையையும ராவணனையும தேடுஙகள ஸமுதரக் கரையிலுள்ள மலைகளிலும காடுகளிலும, முரசீபட்டணம ஜடீபுரம அவநதிபுரம, அங்கலோபையெனற நகரங்களிலும அடாநத மரங களுள்ள அலக்ஷிதமெனற வனததிலும இனனும பறபல ராஜ்யங களிலும விசாலமான படடினஙகளிலும தேடுங்கள ஸிநது நதி ஸமுதரததில விழுமிடததில ஹேமகிரியெனற மலை பல சிக ரங்களுடன விளங்குகிறது. இறகைகளையுடைய ஸிமஹஙகள் அங்கே வஸிககினறன அவை திமிதிமிஙகலம யானை முதலிய பெரிய ஜநதுககளையும எடுததுக்கொண்டு பெரிய மலைகளிலுள்ள தங்களு டைய கூடுகளுக்குப போகினறன ஜனஙகள நிறைநத அநத விசால மான தேசததிலுள்ள யானைகள மதததால மேகஙகளைபபோல கர்ஜி தததுககொணடு மலைச சிகரங்களிலுள்ள அநத ஸிமஹஙகளின் குஹை கக்கு ஸமீபததில பயமில்லாமல திரிகினறன நீஙகள ஸூக்ஷ்மமான

ரூபங்களுடன் தங்கமயமான அந்த உன்னத சிகரத்தில் ஜாக்ரதையாகத் தேடவேண்டும். அதற்கப்பால் பாரிபாத்ரமென்ற மஹாபர்வதத்தின் தங்கச்சிகரம் நூறுயோசனைவிஸ்தீரணமுள்ளதாகக்காணப்படும். அங்கே இருபத்து நான்கு கோடி கந்தர்வர்கள், நினைத்த ரூபங்களைத் தரிக்கக்கூடியவர்களாக வஸிக்கிறார்கள். அந்த மஹாபலசாலிகள் அவைகளை வெகுஜாக்ரதையாகக்காக்கிறபடியால் அங்கிருக்கும் பழங்களையாவது மற்றப் பொருள்களையாவது நீங்கள் தொடக்கூடாது. அவர்கள் விவேகமுள்ளவர்கள். அக்னியின் காந்தியுள்ளவர்கள், ஆனாலும் நீங்கள் அவர்களைக் கண்டு பயப்படாமல் ஸீதையைத் தேடுங்கள்.

அதற்கப்பால் வைடூர்ய நிறமுள்ள வைடூர்யமென்ற ஒரு மலை நூறு யோசனை விஸ்தாரத்துடன் தோன்றும். அங்குள்ள குகைகளில் நன்றாகத் தேடவேண்டும். பிறகு ஸமுத்ரத்தின் நான்காவது பாகத்தில் சக்ரவானென்ற மலை தோன்றும். ஆயிரம் முனைகளையுடைய சக்ரத்தை விசுவகர்மா அங்கே ஸ்ருஷ்டித்து விஷ்ணுவிற்குக் கொடுத்தான். அவர் முன்பு ஒரு காலத்தில் தேவாஸுர யுத்தத்தில் புருஷோத்தமனென்று அவதரித்தார் ஹயக்ரீவனென்ற தானவனைக் கொன்று அவனால் ரக்ஷிக்கப்பட்ட சக்ரத்தையும் பஞ்சஜனமென்ற அஸுரனைக் கொன்று அவனுடைய எலும்பால் செய்யப்பட்ட பாஞ்சஜன்யமென்ற சங்கத்தையும் எடுத்துக்கொண்டு வந்தார். அந்த மலையின் குகைகளிலும் தாழ்வரைகளிலும் ஸீதையையும் ராவணனையும் ஜாக்ரதையாகத் தேடுங்கள். அதற்கு அறுபதாயிரம் யோசனைகளுக்கப்பால் தங்கச் சிகரங்களுள்ள வராஹபர்வதம் தோன்றும். அங்கே ப்ராக்ஜ்யோதிஷமென்ற நகரத்தில் நரகனென்ற கொடிய அஸுரன் வஸிக்கிறான். அங்கேயும் நன்றாகத் தேடுங்கள். அதற்கப்பால் தங்கக் குகைகளுள்ள மேகவானென்ற மலையுண்டு. அந்தத் தங்கமலையில் வஸிக்கும் கரடி முதலிய மிருகங்கள் தங்கள் கர்ஜனையால் மலைகளிலிருந்து எதிரொளியுண்டாவதைக் கேட்டுக் கொழுப்படைந்து அதிகமாகக் கர்ஜிக்கின்றன. தேவதைகள் இந்திரனைத் தங்களுக்கு அரசனாக அங்கே அபிஷேகஞ் செய்தார்கள். அதற்கப்பால் அறுபதாயிரம் தங்க மலைகளைக் காண்பீர்கள். அவை பாலஸூர்யனைப்போல் தங்கமரங்களாலும் புஷ்பங்களாலும் ப்ரகாசிக்கும்.

அந்தச் சிகரங்களுக்கு நடுவில் ஸாவர்ணிமேருவென்ற ஒருமலை மற்றவைகளுக்கு அரசனைப்போல் விளங்குகின்றது. அது ஸூர்ய

னைக் குறித்து கடுந்தபஸ் செய்து, "உன்மேல் ஒரு பகலும் இரவும் வஸிக்கும் ஜந்துக்களெல்லாம் தங்கமயமாவார்கள்" என்ற வரத்தை அடைந்தது. மேலும் தேவகணங்களும் மருத்துக்களும் வஸுக்களும் ஸாயங்காலத்தில் அந்த மலைக்கு வந்து, ஸூர்யனை உபாஸிக்கிறார்கள் ஆதித்யன் அவர்களால் பூஜிக்கப்பட்டு ப்ராணிகளுடைய கண்களுக்குத் தெரியாமல் அஸ்தகிரியை அடைகிறார். அஸ்தகிரி அங்கிருந்து பதினாயிரம் யோஜனை தூரத்திலிருந்தாலும் ஸூர்யன் அதை அரை முஹூர்த்தத்தில் தாண்டிச் செல்லுகிறார் அந்த மலையின் சிகரத்தில் ஒரு பொன்மயமான பட்டணம், பொன்மயமான பசு பக்ஷி முதலியவைகளையுடையதாய் நானு விருக்ஷங்களுடன் விச்வகர்மாவால் அமைக்கப்பட்டிருக்கிறது அது பாசத்தைத் தரிக்கும் வருணனென்ற திக்பாலனுடைய ராஜதானி. ஸாவர்ணி மேருவுக்கும் அஸ்தகிரிக்கும் நடுவில் ஓர் தங்கமயமான பனைமரம், பத்துக்கிளைகளுடன் விசித்ரமான மேடையால் சூழப்பட்டு வெகு உன்னதமாய் விளங்குகிறது அங்குள்ள ஏரிகளிலும் ஆறுகளிலும் குஹைகளிலும் ஜாக்ரதையாகத் தேடுங்கள். அந்த மலையில் மேருஸாவர்ணியென்ற மஹாத்மா வஸிக்கிறார் இனி வரும் மன்வந்தரத்தில் அவர் மனுவாக விருப்பார் ப்ரஹ்மாவிற்கு ஸமமானவர், தேஜஸால் ஸூர்யனைப் போல விளங்குகிறார் அவரை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து ஸீதையின் விருத்தாந்தத்தைக் கேட்கவேண்டியது இதுவரையிலுமே ஸூர்யன் ஒவ்வொரு தினமும் தன் கிரணங்களால் இருளைப் போக்கி வெளிச்சத்தைக் கொடுத்து அஸ்தகிரியில் மறைகிறான். இதற்கப்பால் வானரர்கள் செல்லமுடியாது அங்கே ஸூர்ய ப்ரகாசமில்லை, நாடு நகரமென்ற பிரிவுகளில்லை. இதுவரையில்தான் எனக்குத் தெரியும்.

நீங்கள் அஸ்தகிரி வரையில் சென்று, ஸீதையையும் ராவணனிருக்குமிடத்தையும் கண்டு பிடித்து, ஒரு மாஸத்திற்குள் வந்து சேரவேண்டியது, தவறினால் கொல்லப்படுவீர்கள் எனக்கு மாமனும் மஹா வீரனுமான ஸுஷேணரை உங்களுடன் அனுப்பியிருக்கிறேன். நீங்கள் அவருடைய ஆக்ஞைப்படி நடக்கவேண்டியது. அவர் என்னால் பூஜிக்கப் படுகிறவர், மஹா பலவான், மஹானுபாவர், நீங்களும் பராக்ரமசாலிகள். இவரை முன்னிட்டுக்கொண்டு மேற்குத் திக்கில் ஒவ்வோரிடத்திலும் ஜாக்ரதையாய்த் தேடுங்கள். நீங்கள் ஜானகியைத் தேடிக் கண்டுபிடித்து வந்தால், ரகுநாதன் நமக்குச் செய்த பரம உபகாரத்திற்கு ஒருவாறு பதில்செய்தவர்களா

வோம். அதைவிட நாம் செய்யும் கார்யம் வேறில்லை; அதைப் போன்ற பாக்யம் நமக்குக் கிடைப்பதரிது, பிறகு நாம் செய்யவேண்டியதொன்றுமில்லை. நான் உங்களுக்குச் சொன்ன விஷயங்களைத் தவிர தேச காலங்களுக்குத் தகுந்தபடி யோசித்து நடக்கவேண்டிய”தென்று ஆக்ஞாபித்தான்.

பிறகு ஸுஷேணனும் அவனைச் சேர்ந்த வானரர்களும் ஸுக்ரீவனுக்கு நமஸ்கரித்து அவனிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு மேற்குத் திக்கில் தேடப் புறப்பட்டார்கள்.

ஸர்க்கம் 43.

வடக்கில் தேட அனுப்பினது.

பிறகு ஸுக்ரீவன் சதவலியென்ற வானரவீரனை அழைத்துத் தனக்கும் ராமனுக்கும் ஹிதமான வார்த்தைகளைச் சொல்லவாரம்பித்தான் “நீ என்னைப்போன்ற அநேகமாயிரம் வானரஸேனைகளுடனும் யமனுடைய குமாரர்களுடனும் மந்திரிகளோடும் இங்கிருந்து புறப்பட்டு ஹிமாலயமலையை அலங்காரமாகவுடைய வடக்குத்திசையில் தேடவேண்டும். நாம் இந்தக் கார்யத்தை முடித்து ரகுநாதனுக்குத் திருப்திசெய்தால் அவரிடத்தில் நாம் பெற்ற உபகாரமென்ற கடனைத் தீர்த்துப் புண்யசாலிகளாவோம். ரகுநாதன் நமக்கு அளவற்ற உபகாரம் செய்திருக்கிறாரல்லவா? நாம் அதற்கு ப்ரத்யுபகாரஞ் செய்தால் மாத்ரம் நமது ஜன்மம் கடைத்தேறும். தனக்கு உபகாரஞ் செய்யாத ஒருவன் தன்னை ப்ரார்த்தித்தவுடன் அவனுடைய கார்யத்தை முடித்துக் கொடுக்கும் புண்யாத்மாவின் ஜன்மமே ஜன்மம். நாம் முதலில் உபகாரம் பெற்றதால் அப்படிச் செய்ய வேண்டியதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? நீங்கள் என் ஹிதத்தைக் கோருகிறவர்களானால் இப்பொழுது நான் சொன்ன விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு ஸீதையைக் கண்டுபிடிக்கும் வழியைத் தேடுங்கள் ராமன் ஸகல ப்ராணிகளாலும் பூஜிக்கத் தகுந்தவர், புருஷோத்தமர், சத்ருக்களை நாசஞ்செய்யும் அபார சக்தி பொருந்தினவர், நம்மிடத்தில் விசேஷ ப்ரீதி வைத்தவர் ஆகையால் நீங்கள் ஸகல வனங்களிலும் மலைகளிலும் ஆறுகளிலும் வெகு ஜாக்ரதையாய்த் தேடுங்கள்.

இங்கிருந்து புறப்பட்டு மலேச்சம், புளிந்தம், ஆரஸேனம், ப்ரஸ்தலம், பரதம் (இந்த்ரப்ரஸ்தம் ஹஸ்தினபுரம் முதலியவை) தக்ஷிண குரு, மத்ரகம், காம்போஜம், யவனம், சகம், ஆரட்டகம், பாஹ்லீகம், ரிஷிகம், பௌரவம், டங்கணம், சீனம், பரமசீனம், நீஹாரம். தரதம் முதலிய தேசங்களையும், ஹிமாலயபர்வதத்தையும் அதிலுள்ள ஏரிகளையும் தேவதாருவனங்களையும் ஜாக்ரதையாய்த் தேடுங்கள். பிறகு ஸோமனுடைய ஆச்ரமத்தைத் தாண்டி, தேவதைகளாலும் கந்தர்வர்களாலும் கொண்டாடப்பட்ட காலம் என்ற பர்வதத்தைக் காண்பீர்கள். அங்கேயும் நன்றாய்த் தேடவேண்டியது, அங்கிருந்து ஸுதர்சனம் தேவஸகா வென்ற அழகான பர்வதங்களிலும் தேடுங்கள். அதற்கப்பால் நூறு யோஜனையில் ஆறு, ஏரி வனம் பசு பக்ஷிகள் ஒன்றுமில்லாத கோரமான பாலைவனம் தோன்றும். அதிசீக்ரத்தில் அதை ஆகாசமார்க்கமாய்த் தாண்டிக் கைலாஸமென்ற மஹாபர்வதத்தைக் காண்பீர்கள் அதில் வெளுத்த மேகத்தைப் போல் அழகான ஓர் நகரம் விச்வகர்மாவால் குபேரனுக்கு வாஸஸ்தானமாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறது அங்கே மானஸமென்ற ஏரி, தாமரைகளாலும் ஹம்ஸம் முதலிய நீர்ப்பறவைகளாலும் நிறைந்து அப்ஸரஸ்களால் கொண்டாடப்படுகிறது அங்கே யக்ஷராஜாவான குபேரன், குஹ்யகர்களென்ற தேவகணங்களுடன், ஸகல ஐச்வர்யங்களுக்கும் அதிபதியாய் வஸித்துக்கொண்டிருக்கிறான். சந்த்ரனைப்போல் வெளுத்த அந்தப் பர்வதத்தின் ஒவ்வொரு பாகத்திலும் தேடுங்கள். பிறகு க்ரௌஞ்ச பர்வதத்தைச் சேர்ந்து, அங்கே ஸ்கந்தருடைய சக்தி ஆயுதத்தால் பிளக்கப்பட்ட ஓர் குஹையில் ப்ரவேசித்துத் தேடுங்கள். அது ஒருவராலும் ப்ரவேசிக்கமுடியாதென்று சொல்லுகிறார்கள். அந்தக் குஹையில் ஸூர்யனைப்போல் காந்தியுள்ள சில மஹர்ஷிகள் வஸிக்கிறார்கள். அவர்கள் தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறவர்கள், தேவதைகளின் ரூபத்தைத் தரித்தவர்கள் க்ரௌஞ்ச கிரியின் குஹைகளையும் சிகரங்களையும் தாழ்வரைகளையும் பிளப்புகளையும் அடிவாரங்களையும் நன்றாய்த் தேடுங்கள். பிறகு மன்மதன் தபஸ் செய்த வ்ருக்ஷங்களற்ற காமசைலம் என்ற மலையையும் மானஸமென்ற மலையையும் பரிசோதிக்கவேண்டியது. அந்த மானஸபர்வதத்தில் தேவ தானவ ராக்ஷஸர் முதலியவர்கள் ஸஞ்சரிக்கக்கூடாது அங்கே ஒவ்வோரிடத்திலும் ஜாக்ரதையாய்த் தேடவேண்டியது.

அதற்கப்பால் மைநாக பர்வதத்தில் மயனென்ற அஸுரன் தனக்கு அழகான வாஸஸ்தானத்தை ஸ்ருஷ்டித்திருக்கிறான்.

அங்கே கிம்புருஷஸ்த்ரீகள் வஸிக்கிறார்கள். அதற்கப்பால் ஸித்தர்கள் வைகானஸர்கள் வாலகில்யர்கள் முதலிய மஹா யோகிகளின் ஆசிரமங்கள் காணப்படும். அவர்கள் தபஸ் ஸித்தி அடைந்து ஸகல பாபங்களும் மற்றவர்களாக ஜ்வலிக்கிறார்கள். அவர்களை நமஸ்கரித்து, ஸீதையின் வரலாற்றையும் வணக்கமாக விசாரியுங்கள். அங்கே வைகானஸமென்ற ஒரு ஏரி தங்கத்தாமரைகளாலும் பால ஸூர்யனைப் போன்ற ஹம்ஸங்களாலும் விளங்குகிறது குபேரனுக்கு வாஹனமான ஸார்வ பௌமமென்ற திக்கஜம் பெண்யானைகளுடன் அங்கே ஸஞ்சரிக்கும். அதற்கப்பால் ஸூர்ய சந்த்ர நக்ஷத்ரங்களும் மேகங்களுமில்லாமல் எல்லையற்ற ஓர் தேசம் அங்குள்ள மஹா யோகிகளின் தேஜஸ்ஸால் எப்பொழுதும் பகல் போல ப்ரகாசிக்கிறது. அதற்கப்பால் சைலோதையென்ற நதி தோன்றும். அதின் கரைகளில் அடர்ந்த மூங்கிற்காடுகளுண்டு. அவை ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு ரிஷிகள் அந்த நதியை ஸுலபமாகத் தாண்டும் பாலமாக விருக்கிறது.

அதற்கப்பால் புண்யாத்மாக்கள் வஸிக்கும் உத்தர குருவென்ற தேசமுண்டு. அங்கே தங்கத்தாமரைகளுள்ள ஓடைகளும் இந்த்ரநீல வைடூர்ய மயமான இலைகளையுடைய நானா புஷ்பங்களால் நிறைந்த பல ஆறுகளுமுண்டு. அங்குள்ள ஏரிகள் செங்கழுநீர் முதலிய தங்கமயமான புஷ்பங்களால் விளங்குகின்றன. ரத்னமயமான இலைகளும் பொன்மயமான தாதுக்களையுமுடைய கருநெய்தல் புஷ்பங்களும், முத்துகளால் நிறைந்து நவமணிகள் கலந்த மணற் குன்றுகளும், எப்பொழுதும் தளிர்த்துப் பூத்துக் காய்க்கும் ரத்னமயமான மரங்களும் அபூர்வமான பக்ஷிகளும் காணப்படும். சில மரங்களிலிருந்து திவ்யமான கந்தங்களும் ரஸங்களும், இன்னும் வேண்டியவைகளும் பெருகும் சில விருக்ஷங்கள் விசித்ரமான ஆடைகளையும் ஸ்த்ரீ புருஷர்களுக்குத் தகுந்த சிரேஷ்டமான ஆபரணங்களையும் கொடுக்கும். சில மரங்கள் விநோதமான படுக்கைகளையும் ஹாரங்களையும் கொடுக்கும். சில மரங்கள் ருசியுள்ள பக்ஷ்யங்களையும் பானங்களையும் கொடுக்கும். அங்கே மஹாதேஜஸ்ஸுள்ள கந்தர்வர்களும் கின்னரர்களும் ஸித்தர்களும் நாகர்களும் வித்யாதரர்களும் தங்கள் நாயகிகளுடன் விளையாடுகிறார்கள் எல்லோரும் புண்யசாலிகள், எப்பொழுதும் ஸுகத்தையே அனுபவிக்கிறவர்கள். ஸகல ஆசைகளையும் பூர்த்திசெய்தவர்கள், எப்பொழுதும் நாயகிகளை விட்டுப் பிரியாதவர்கள். அங்கே எக்காலத்திலும் பாட்டும் வாத்யங்களும் சிரிப்பும்

கேட்கப்படும் அங்கே ஸந்தோஷமில்லாதவனாவது நாயகியில்லாதவனாவது கிடையாது அவ்விடத்தில் வஸிப்பவர்களுடைய ஸுகம் முதலிய உத்தம குணங்கள் நாளுக்கு நாள் வளரும் (ராக்ஷஸர்கள் மேருமலையில் வஸிக்க முடியாததால் அங்கே தேடச் சொல்லவில்லை.)

அதற்கப்பால் வடக்கு லவண ஸமுத்ரம் தோன்றும். அங்கே ஸோமகிரி யென்ற மலையுண்டு. இந்த்ர லோகத்திற்கும் பரஹ்ம லோகத்திற்கும் போகிறவர்கள் அந்த வழியாகப் போகவேண்டியதால் அதைப் பார்த்துக்கொண்டே போவார்கள் அங்கே ராத்ரியில் ஸூர்ய காந்தியில்லாவிட்டாலும் அந்த மலையின் காந்தியால் பகல் போல ப்ரகாசிக்கும் அங்கே ஸகலப்ரபஞ்சத்தையும் சரீரமாகவுடையவரும் அனந்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப் பட்டவருமான வாஸுதேவனும் ஏகாதச ருத்ராகளின் மூர்த்தியான பரமசிவனும் தேவதைகளுக்கு அதிபதியான ப்ரஹ்மாவும் ரிஷிகளால் சூழப்பட்டு வஸிக்கிறார்கள். அதற்கப்பால் நீங்கள் போக முடியாது தேவதைகளும் மற்ற யாவரும் ஸோமகிரிக்குப் போவதும் கஷ்டம் ஆகையால் அந்த மலையைத் தாசித்துத் திரும்பிவிடுங்கள் அதுவரையில் மனுஷ்யர்கள் போகத்தகும். அதற்கப்பாலுள்ள ஸமுத்ரங்களும் த்வீபங்களும் ஸூர்ய கிரணமற்றும் நாடுநகரம் முதலிய பிரிவுகளற்றும் ஒரே இருளாகவிருக்கும் அவ்விடங்களை நான் பார்த்ததுமில்லை, அவைகளைப்பற்றிக் கேட்டதுமில்லை 'நான் சொன்ன விடங்களையும் மற்றவிடங்களையும் வெகு ஜாக்ரதையாகத் தேடி ஸீதையையும் ராவணனிருக்கு மிடத்தையும் கண்டுபிடித்து வாருங்கள் அப்படிச் செய்தால் எனக்கும் ரகுவீரனுக்கும் அளவற்ற திருப்தியுண்டாகும். பிறகு நீங்களும் உங்கள் மித்ரர்களும் உங்கள் பந்துக்களும், யாதொரு கவலையுமற்று என்னால் மிகுந்த மர்யாதை பெற்று ஸகல ஸௌக்யங்களையும் அனுபவித்துக்கொண்டு வாழ்வீர்க"ளென்று கட்டளையிட்டான்.

ஸர்க்கம் 44.

ராமன் ஆஞ்ஜநேயரிடத்தில் மோதிரத்தைக் கொடுத்தது.

பிறகு ஹனுமான் வானர சிரேஷ்டரென்றும் கார்யத்தை முடிக்கக் கூடியவரென்றும் மஹாபராக்ரமசாலியென்றும் ஸுக்ரீவன்

நிசசயிதது அவரைத தனியாக அழைததுப "பூமி ஆகாசம ஸ்வர்க்கம புவர்லோகம முதலிய எவவிடஙகளிலும உனககுத தடையிலலை யென்று எனககுத தெரியும அஸுராகள கநதாவாகள நாகாகள் தேவதைகள மனுஷயாகள முதலிய பராணிகளிலும எலலா லோகங்களிலும ஸமுதரஙகளிலும மலைகளிலும உனககுத தெரியாதது யாதொனறுமிலலை நடை வேகம காநதி சுறுசுறுப்பு முதலிய குணஙகளில நீ உன பிதாவான வாயுவிறகு ஸமமலலவா? தேஜஸில உனனைபபோனற பராணி வேறெனறு மிலலை ஆகையால ஸீதையைக கண்டுபிடிகக உனனையே நமபியிருககிறேன பலம புததி பராக்ரமம தேச காலங்களுக்குத தகுநதபடி நடநதுகொளவது உபாயம முதலிய உததம குணஙகள உனனிடததிலேயே விளஙகுகினறன" வென்று மெசசினன

ராமனும, "இவன நமது காரியததை முடிபபதில ஆவலோடிருககிறான. ஸுகரீவன எலலாப பொறுபபையும இவனிடததிலேயே வைததிருககிறான. இவன இநதக காரியததை முடிககக்கூடியவனெனறு எனககும தோனறுகிறது இதறகு வேண்டிய உபாயங்களையும ஸாதனஙகளையும, இதில நேரும இடையூறுகளையும அவைகளுககுப பரிஹாரஙகளையும நனறாக அறிநதிருககிறான இவன இதுவரையிலும செயத அபூரவச செயலகளாலும யஜமானனுககு இவனிடததிலுளள நமபிககையாலும நமது உததேசததை இவன முடிபபானெனபதில ஸநதேஹமிலலை" யெனறு எண்ணி, ஹனுமான புறபபடத தயாராயிருபபதைக கண்டு தன எணணஙகள நிறைவேறினதுபோல ஆனநதமடைநதார பிறகு தன பெயரால் அலஙகரிககபபடட முததிரை மோதிரததை ஸீதைககு அடையாளமாகக காடடுமபடி அவரிடததில கொடுதது "இநத அடையாளததால நீ எனனால அனுபபபபடடவனெனறு ஸீதை நிசசயமடைநது ஸநதேஹபபடாமல உனனிடததில ஸமாசாரததைச சொலலியனுபபுவாள. உன முயறசியையும பலததையும பராக்ரமததையும ஸுகரீவனுககு உனனிடததிலுள்ள நமபிககையையும பாரககுமபொழுது என காரியம நிறைவேறறுமெனறே எண்ணுகிறேன" னெனறார.

ஆஞ்ஜநேயரும அதை மஹா பகதியுடன பெறறுககொண்டு, தலைமேல கைகூபபி ரகுநாதனை வணங்கிப புறபபட ஸிததமானார். மேகஙகளறறு நிரமலமாகப பரகாசிககும ஆகாசததில சநதிரன நக்ஷத்ரங்களுடன விளங்குவதைபபோல, ஹனுமான அநத வானர ஸைனயததை அழைததுககொணடு புறபபடுமபொழுது, ராமன

"ஆஞ்ஜநேய! அளவற்ற பராக்ரமசாலி! வாயு புத்ர! நிகரற்ற உன் வீர்யத்தையும் பலத்தையுமே நம்பியிருக்கிறேன். எப்படியாவது நான் ஸீதையை அடையும்படி செய்யவேண்டியது உன் பொறுப்" பென்றார்.

ஸர்க்கம் 45.

வானரர்கள் புறப்பட்டது.

பிறகு ஸுக்ரீவன் ஸகல வானரர்களையும் பார்த்து "நான் உங்களுக்கு விஸ்தாரமாகச் சொன்னபடி நீங்கள் இந்தப் பூமண்டலத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அதிஜாக்ரதையாகத் தேடவேண்டு" மென்று கட்டளையிட்டான். அவர்கள் மஹாராஜாவின் உத்திரவைத் தலையால் தாங்கி, அதைக் கொஞ்சமாவது தவறினால் கடுந் தண்டனை விதிக்கப்படுமென்று நன்றாக அறிந்து, வெட்டுக்கிளிகளைப் போல ஆகாசத்தையும் பூமியையும் மறைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். பிறகு ராமலக்ஷ்மணர்கள் ப்ரஸ்ரவண பர்வதத்தில் வஸித்துக்கொண்டு கெடுவைத்த காலத்தின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சதவலி வடக்கிலும் விநதன் கிழக்கிலும் ஹநுமானும் தாரனும் தெற்கிலும் அங்கதனும் ஸுஷேணனும் மேற்கிலும்தேடிக்கொண்டு போனார்கள். இப்படி நான்கு திசைகளிலும் முக்யமான ஸேனைத் தலைவர்களை அனுப்பிவிட்டு ஸுக்ரீவன் ஸந்தோஷமடைந்தான். வானரர்கள் ஸுக்ரீவனுடைய வார்த்தைகளை ஞாபகத்தில் நன்றாக வைத்துக்கொண்டு "எப்படியாவது ஸீதையைக் கொண்டுவருவோம் ராவணனை நாசஞ் செய்வோ"மென்று வீரவாதம் பேசிக்கொண்டும் ஸிம்ஹநாதஞ் செய்துகொண்டும் கர்ஜித்துக் கொண்டும் தங்களுடைய பலபராக்ரமங்களைச் சொல்லிக்கொண்டும் போனார்கள் நான் ஒருவனே ராவணனை யுத்தத்தில் மடிப்பேன். "அவனை ஒரு நிமிஷத்தில் தேய்த்து ஸீதையைக் கொண்டு வருவேன்." "நீங்கள் இங்கேயிருங்கள், நான் ஒருவனே போய்க் கார்யத்தை முடித்து வருகிறேன்." "ராவணன் ஸீதையைப் பாதாளத்தில் வைத்திருந்தாலும் நான் ஒருவனே போய்க் கொண்டு வருவேன்" "மரங்களை ஒடிப்பேன்," "மலைகளைப் பெயர்த்தெறிவேன்." "பூமியைப் பிளப்பேன்." நூறு யோஜனை தூரம் தாண்டு

வேன." "நூறு யோஜனைககதிகமாகத தாண்டுவேன" "பூமி ஸமுத்ரம மலைகள வனஙகள பாதாளததின நடுவு இவைகளில எஙகேயும எனககுத தடையிலலை"யெனறு இபபடி ஒவவொரு வானரனும பலததால காவமடைநது, ஸுகரீவனுககெதிரில பெருமை பேசிககொணடு புறபபடடாரகள.

ஸர்க்கம் 46.

ஸுக்ரீவன் பூமண்டலத்தைச் சுற்றினது.

அவாகள போன பிறகு ராமன ஸுக்ரீவனைப் பாாதது, "இப்பூமண்டலததின வரலாறு உனககு எபபடித தெரியு"மெனறார். ஸுக்ரீவன "ஸ்வாமி! முனபு எருமையின ரூபந தரிததுவநத துநதுபியெனற அஸுரனை வாலி ஜயிதது மலய பாவததைநோககித துரததிககொணடு போகையில அவன அநத மலைககுஹையில புகுநதான. உடனே வாலியும அவனைக கொலல நினைதது தொடர்நதான. குஹை தவாரததில காததுககொணடிருக்குமபடி வாலி எனககுக கட்டளையிட்டான ஒரு வாஷமாகியும வாலி வெளியில் வரவிலலை, மேலும அநதக குஹையிலிருநது ரகத பரவாஹம ஓடி வநதது. ஆகையால என தமையன இறநதானெனறு நிசசயிதது மிகவும துககமடைநதேன அநத அஸுரன வெளியில வராமல அங்கேயே மடியவேணடுமெனறு ஒரு பெரிய பாறையால குஹையின வாசலை மூடினேன பிறகு கிஷகிநதைககு வநது வானர ராஜயததையும தாரையையும ருமையையும அடைநது மிதராகளுடன கவலையறறு வஸிதது வநதேன. இபபடியிருககை வாலி அநத அஸுர சரேஷ்டனைக கொனறுவிடடு கிஷகிநதைககு வநதான. நான அவனைக கணடு பயநது ராஜ்யததை அவனிடததில ஒபபுவிததேன. ஆனால அவன் எனனைககொலல வெண்ணிக கோபபரவசனாகி எனனையும என மநதரிகளையும துரததினான.

அபபடி ஓடிக்கொண்டிருககையில பல நதிகளையும வனங்களையும நகரஙகளையும பாாததேன. அபபொழுது இநதப பூமி கணணுடியில பாாககும படங்களைபபோலும, வேகமாயச சுழறறபபடட கொளளிககட்டையைப போலும, ஒரு குளபபடியைபபோலும எனககுக காணபபடடது. முதலில கிழககேபோய, பல மரஙகள ஏரிகள ஆறு

கள் மலைகள் தாதுக்கள் நிறைந்த உதயகிரி அப்ஸரஸ்களுக்கு பிரிய மான பாற்கடலென்றவைகளை ஓடும்பொழுதே பார்த்தேன். பிறகு திரும்பிவந்து தெற்கிலோடி விந்திய மலையையும் சந்தனம் முதலிய அபூர்வ மரங்களையும் பார்த்துக்கொண்டு அந்தத் திக்கின் எல்லைவரை யில் போனேன் அங்கும் வாலியால் துரத்தப்பட்டு மேற்கில் ஓட ஆரம்பித்தேன். அங்கே பல தேசங்களையும் அஸ்தகிரியையும் கண்டு, அங்கிருந்து வடக்கிலோடினேன். அங்கே ஹிமயம் மேரு முதலிய மலைகளையும் வட ஸமுத்ரத்தையும் கண்டேன் எல்லாவிடங் களிலும் வாலி என்னைத் துரத்தினதால் ஒன்றுந் தோன்றாமல் திகைத் தேன். அப்பொழுது மஹா புத்திமானான ஹனுமான் 'ஸ்வாமி! மதங்க மஹாஷி தன் ஆச்ரமத்தின் எல்லைக்குள் வாலி அடிவைத் தால் அவனுடைய தலை ஆயிரம் சுக்கலாய் வெடிக்கவேண்டுமென்று சபித்திருக்கிறார். ஆகையால் அங்கே வரத் துணியமாட்டான் நாம் கொஞ்சங்கூடப் பயமில்லாமல் அங்கே வஸிக்கலா' மென்றான். (இந்த யோஜனை ஹனுமானுக்கு முன்பு என் தோன்றவில்லை) அப்படி ரிசய மூக பர்வதத்தில் நீங்கள் வரும் வரையிலிருந்தோம். மதங்கரிஷியின் சாபத்திற்குப் பயந்து வாலி அங்கே வரவில்லை இப்படி பூமண்டலம் முழுவதையும் நான் நேரில் பார்த்துவிட்டு இந்தக்குகையில் வந்து வஸிக்க ஆரம்பித்தே" னென்றான்.

ஸர்க்கம். 47.

மூன்று திக்குகளில் போன வானரர்கள் திரும்பி வந்தது.

ஸுக்ரீவனுடைய கட்டளைப்படி ஸீதையைத் தேடப் புறப் பட்ட வானரர்கள் ஏரி ஆறு புதர் பாலைவனம் நகரம் வெள்ளம் மலை முதலியவைகளைத் தேடிக்கொண்டு வெகு வேகமாகப் போனார்கள் பகல் முழுதும் வனங்களிலும் மலைகளிலும் ஸீதையைத் தேடி இர வில் எல்லாரும் பூமியில் வந்து சேருவார்கள். பகலில் ஆஹாரம் நித்ரை யில்லாமல் அந்தந்த விடங்களில் ஒரு மாஸம்வரையில் தேடிக் களைத்து, ஸீதையைக் காணாமல் ஆசையற்று ஸுக்ரீவனிடத்தில் வந்து வரலாற்றைத் தெரிவித்தார்கள். வினதனும் அவனுடன் போன ஸைன்யங்களும் கிழக்கில் ஸீதையைத் தேடிக் காணாமல் திரும்பிவந்தார்கள். சதவலி வடக்கில் ஒவ்வோரிடத்திலும் ஜாக்ர தையாகத் தேடியும் ஸீதையைக் காணாமல் திரும்பிவந்தான். அப

படியே ஸுஷேணனும் மேற்கில் தேடிப் பார்த்து ஸீதையைக் காணாமல் திரும்பிவந்தான். எல்லோரும் ப்ரஸ்ரவணகிரியில் ராமனுடன் உட்கார்ந்திருக்கும் ஸுக்ரீவனிடத்திற்கு வந்து "ஸ்வாமி! மலை காடு குகை ஆறு கடல் நகரம் புரம் முதலியவைகளையும் தாங்கள் சொன்ன இடங்களிலும் மற்ற இடங்களிலும் வெகு ஜாக்ரதையாகத் தேடினோம். மஹாவீர்யமுள்ள பல ப்ராணிகளை ராவணனாயிருக்கலாமென்ற எண்ணத்துடன் கொன்றோம். ஸீதையைக் காணவில்லை. அவளைப் பார்க்கும் பாக்யனுசெய்த வானர சிரேஷ்டன் எந்த மஹா பலவானுடைய புத்ரனோ? எந்த மஹா தாயசாலியின் புத்ரனோ? ஸீதை கொண்டு போகப்பட்டதாகத் தெரியும் திக்கிலேயே வாயு புத்ரனான ஹனுமானும் தேடப் போயிருக்கிறு"ரென்று தெரிவித்தார்கள்.

ஸாக்கம் 48.

தெற்கில் தேடினது.

ஹனுமான், தாரன் அங்கதன் முதலியவர்களுடன் ஸுக்ரீவன் கட்டளைப்படி, வெகுதூரஞ்சென்று, விந்த்யபர்வதத்தின் சிகரங்களையும் குகைகளையும் அநேக வனங்களையும் அவைகளைச் சூழ்ந்த மலைகளையும் ஆறுகளையும் குளங்களையும் மரங்கள் அடர்ந்த காடுகளையும் காடுகளால் மூடப்பட்ட குன்றுகளையும் தேடிக்கொண்டு போகையில், ஸீதையைக் காணாமல் கவலை கொண்டார்கள். அங்கங்கே கிடைக்கும் காய் கனிகளையும் கிழங்குகளையும் புஜித்துக்கொண்டு தேடிச் செல்லும்பொழுது அநேக குகைகளுள்ள ஒரு பரதேசத்தைக் கண்டார்கள். அது நீர், நிழல், பசு, பக்ஷி, மிருகம் முதலிய பதார்த்தங்களில்லாமல், பார்க்கப் பயங்கரமாயிருந்தது. அவ்விடத்தை விட்டு அப்புறம் சென்று, அப்படிப்பட்ட அநேக அரண்யங்கள் நேர்ந்ததைக் கண்டு, அவைகளில் ஜாக்ரதையாய்த் தேடிக் களைத்தார்கள்.

பிறகு மற்றொரு தேசத்தைச் சேர்ந்து பார்க்கையில், மரங்களில் பழங்களும் புஷ்பங்களும் இலைகளுமில்லை, ஆறுகளில் ஜலமில்லை, வேர்கள் கிழங்குகள் கிடைக்கவில்லை, எருமை மான் யானை புலி, பக்ஷிகள் முதலிய ஜந்துக்களின் ஸஞ்சாரமே கிடையாது, மரங்

கள் ஓஷதிகள் கொடிகள் செடிகள் காணப்படவில்லை, தாமரையோடைகள் புஷ்பங்களற்று நீர் வற்றி வண்டுகளின் சப்தமில்லாமல் பாழடைந்திருந்தன. அந்தவனத்தில் கண்டுவென்ற மஹாருஷி வஸித்துக்கொண்டிருந்தார். அவர் ஸத்யவான், மஹாதபஸ்வி, நியமங்களைப் பூர்ணமாயனுஷ்டித்தவர், ஒருவராலும் நெருங்கமுடியாத தேஜஸுள்ளவர். அவருக்குப் பதினாறு வயஸுள்ள ஓர் புத்ரனுண்டு. அவன் ஒரு நாள் அந்தக் காட்டில் வழி தப்பி உயிரிழந்தான். அதனால் கண்டுமஹாருஷி அந்த ஆரண்யத்தின்மேல் கோபங்கொண்டு, ஸகல ஜந்துக்களுமற்றுக் கோரமான பாலைவனமாகும்படி அதைச் சபித்தார். அங்குள்ள பர்வதங்களையும் குஹைகளையும் நதிகளின் உற்பத்தி ஸ்தானங்களையும் வானரர்கள் ஜாக்ரதையாய்த் தேடிப்பார்த்தும், ஸீதையாவது அவளை அபஹரித்த ராவணனையாவது காணவில்லை

அதற்கப்பால் தேடிச் செல்லுகையில் கோரரூபமுள்ள ஒரு அஸுரனைக் கண்டார்கள். அவன் மஹாக்ரூரன், தேவர்களுக்கும் அஞ்சாதவன்; மஹாபர்வதத்தைப் போல் அவன் வழிமறித்து நிற்பதைக் கண்டு வானரர்கள் அவனுடன் யுத்தஞ் செய்ய ஸித்தமானார்கள். அவனும் வானர ஸைன்யங்களைக் கண்டு, "நீங்களெல்லோரும் என் கையிலகப்பட்டு, இந்த க்ஷணத்தில் நாசமடையப் போகிறீர்கள்" என்று கர்ஜித்துக்கொண்டு, வஜ்ரம் போன்ற முஷ்டிகளை உயர்த்தித் தூக்கிக்கொண்டு அவர்களை நோக்கி ஓடிவந்தான். அப்பொழுது அங்கதன் அவனை ராவணனென்றெண்ணி, அவன்மேல் பாய்ந்து கையாலறைந்தான். உடனே பெருங்காற்றால் சாய்க்கப்பட்ட பர்வதத்தைப் போல், அவன் பூமியில் விழுந்து ரத்தத்தைக் கக்கிக்கொண்டு உயிரை விட்டான். வானரர்கள் அவனைக் கொன்றதால் மிகவும் ஸந்தோஷமடைந்து, அவனே ராவணனென்ற எண்ணத்தால் அங்கிருந்த காடுகளில் ஸீதையை வெகுகாலம் தேடிக்கொண்டிருந்தார்கள். அங்கும் அவளைக் காணாமல் மற்றோர் காட்டிற்குச் சென்று, அங்கேயுந் தேடி அலுத்து மனங்குன்றி, ஓர் மரத்தடியில் எல்லோரும் உட்கார்ந்தார்கள்.

ஸர்க்கம் 49

(தொடர்ச்சி)

அப்பொழுது அங்கதன் வெகு சிரமத்துடனிருந்தாலும், மஹா புத்திமானானதால், மற்ற வானரர்களைத் தேற்றி, "நாம் காடுகள் மலைகள் நதிகள் பிளப்புகள் குகைகள் முதலிய எல்லாவிடங்களிலும் தேடிப்பார்த்தோம் ஜானகியையாவது அவளை அபஹரித்த ராக்ஷஸனையாவது காணவில்லை. வெகு காலஞ் சென்றுவிட்டது, மஹா ராஜாவின் ஆக்ஞையோ மிகவும் கடுமையானது ஆகையால் நீங்க ளெல்லோரும் சோம்பலையும் தூக்கத்தையும் சோகத்தையும் விட்டு ஸீதையை மறுபடியுந் தேடுங்கள், ஸீதையைக் காணுமவரையில் தேடிக்கொண்டேயிருக்கவேண்டும், ஒருவனிடத்தில் மனந்தள ராமை உத்ஸாஹம் கலங்காத தைர்யமென்ற குணங்கள் பொருந்தி யிருந்தால், அவனுக்கு ஸகலகார்யங்களும் கை கூடும் ஆகையால் மறு படியும் இந்த வனத்தை மஹா ஜாக்ரதையாய்த் தேடுங்கள் கவலைப் படவேண்டாம். நாம் ஒரு கார்யத்தை மனப்பூர்வமாய், ஊக்கத்துடன் செய்தால், அது பலத்தைக் கொடுக்காமல் போகாது. இதுவரையி லும் வெறுப்படைந்தது போதும். இப்பொழுது கூட்டக் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தால் நமது கார்யம் எப்படி முடியும்? ஸுக்ரீவன் அதி சீக்ரத்தில் கோபிக்கிறவர்; கடுந் தண்டனை விதிக் கிறவர். அவரிடத்திலும் ரகுவீரனிடத்திலும் நாம் பயப்படவேண் டியதல்லவா? உங்களுடைய ஹிதத்தை உத்தேசித்து இப்படிச் சொன்னேன். பின்பு உங்களிஷ்டப்படி செய்யுங்கள். அல்லது நாம் இப்பொழுது செய்யவேண்டியதையாவது சொல்லுங்க" ளென்றான்.

அதைக்கேட்டுக் கந்தமாதனன், தாஹத்தாலும் சிரமத்தாலும் வீரர்களைத்தளர்ந்தவர்களுக்குள்ளே, "அங்கதனுடைய வார்த்தைகள் உங்களுக்கு ஹிதமாயும் அனுகூலமாயுமிருக்கும், அப்படியே செய்யுங்கள். மலை களிலும் காடுகளிலும் குகைகளிலும் தாழ்வரைகளிலும் மஹா ராஜா சொன்னபடி மறுபடியும் ஜாக்ரதையாய்த் தேடுவோ"மென் றான். அதைக் கேட்டு மற்ற வானரர்கள் தைர்யங்கொண்டு விந்த்ய பர்வதம் முதல் தேடிக்கொண்டே சென்றார்கள். ஓரிடத்தில் சரத் கால மேகம்போன்ற ஓர் வெள்ளி மலையைக் கண்டு, அங்குள்ள

குகைகளிலும் சிகரங்களிலும் ஏழிலை பாலைக் காடுகளிலும் தேடினார்கள். அங்கும் ஸீதையைக் காணாமல் களைத்து, அம்மலையின் அடிவாரத்திலிறங்கி ஓர் மரத்தடியில் சற்றுநேரம் இளைப்பாறத் தங்கினார்கள். பிறகு கொஞ்சங் களைதீர்ந்து, விந்தியம் முதற்கொண்டு தெற்குத்திசை முழுவதையும் தேட முயற்சி செய்தார்கள்.

ஸர்க்கம் 50.

ரிக்ஷபிலத்தில் புகுந்தது.

ஹநுமானும் தாரனும் அங்கதனும் விந்தியபர்வதத்தின் குகைகளிலும் அடர்ந்த காடுகளிலும் ஸிம்ஹம் புலி முதலிய துஷ்ட மிருகங்களுள்ள புதர்களிலும் ஆறுகளிலும் மலைகளின் மேடு பள்ளங்களிலும் மலை யருவிகளிலும் தேடினார்கள். அதற்குள் ஸுக்ரீவன் கெடுவைத்த ஒரு மாஸகாலங் கழிந்துவிட்டது. அங்குள்ள குகைகள் முதலிய ஒவ்வொரு விடங்களிலும் ஹநுமான் வெகு ஜாக்ரதையாய்த் தேடினார். கஜன் கவாக்ஷன் கவயன் சரபன் கந்தமாதனன் மைந்தன் த்விவிதன் ஸுஷேணன் ஜாம்பவான் நளன் அங்கதன் தாரன் முதலியவர்கள் மலை ப்ரதேசங்களை ஒவ்வொன்றாயத் தேடிவருகையில், மயனென்ற தானவனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ரிக்ஷபிலமென்ற ஒரு விஸ்தாரமான குகையைக் கண்டார்கள். வானரர்கள் பசி தாஹம் மேலிட்டுக் களைத்து அங்கேவந்து, கொடிகளாலும் விருக்ஷங்களாலும் அது மூடப்பட்டிருப்பதையும், அங்கிருந்து க்ரௌஞ்சம் ஹம்ஸம் முதலிய பக்ஷிகள் ஜலத்தால் நனைந்து தாமரைத் தாதுக்களால் சிவந்து பறந்து வருவதையும், குளிர்ந்த காற்று புஷ்பங்களின் வாஸனையை க்ரஹித்துக் கொண்டு அதிலிருந்து வீசுவதையும் கண்டு, அதற்குள் ஒரு தாமரை யோடை யிருக்க வேண்டுமென்று ஸந்தேஹித்து, அதில் பயமில்லாமல் ப்ரவேசித்தார்கள்.

அது நானா ஜந்துக்களால் நிறைந்து, பார்க்கப் பயங்கரமாய் நுழைவதற்கு முடியாமல், பாதாளத்தைப் போல ஆழமுற்றிருந்தது. அப்பொழுது பர்வத சிகரத்தைப் போன்ற தேஹத்துடன் விளங்கும் ஹநுமான் மற்ற வானரர்களைப் பார்த்து, நாமெல்லோரும் மலை ப்ரதேசங்களிலும் காடுகளிலும் ஸீதையை மிகவும் ஜாக்ரதையாய்த்

தேடிப்பார்த்தும் காணவில்லை. களைப்பு மேலிடுகின்றது. இந்தக் குகையிலிருந்து ஹம்ஸம் க்ரௌஞ்சம் சக்ரவாகம் முதலிய நீர்ப்பறவைகள் ஜலத்தால் நனைந்து பறந்து வருகின்றன. ஆகையால் இதில் ஓர் பெரிய கிணறாவது மடுவாவதிருக்கவேண்டும். இதின் த்வாரத்தில் அழகான மரங்கள் செழித்து வளர்வதைக் கண்டீர்களா?" வென்றார். பிறகு வானரர்கள் அதில் நுழைந்து பார்க்கையில், ஸூர்ய சந்த்ரர்களுடைய வெளிச்சமுமில்லை, எங்கும் இருள் மூடிப் பயங்கரமாயிருந்தது. அதிலிருந்து ஸிம்ஹம் முதலிய மிருகங்களும் வருவதைக் கண்டார்கள். பிறகு அவர்கள் அடர்ந்த இருட்டுள்ள ஓர் ப்ரதேசத்தில் நுழைந்து வாயு வேகமாய்ச் சென்றார்கள். அவர்களுடைய பார்வைக்கும் ப்ரபாவத்திற்கும் பராக்ரமத்திற்கும் யாதொரு குறைவுமில்லை. ஆனால் அங்கிருந்த பதார்த்தங்கள் இருட்டால் கண்ணிற் படவில்லை. பிறகு ஒருவர்க்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டும் கட்டிக்கொண்டும் சென்றார்கள். அதற்குள் அவர்கள் சரமம் மேலிட்டுப் பரகளையுற்றுத் தாஹமெடுத்து, ஜலம் ஜலமென்று கூச்சலிட்டார்கள். இப்படி வெகு தூரம் நடந்து இளைத்து முகம் வாடி, "இனி பிழைக்கமாட்டோம், நிச்சயமாய் இறப்போ" மென்றெண்ணங் கொண்டார்கள்.

பிறகு ப்ரகாசமுள்ள ஓர் அழகான ப்ரதேசத்தைச் சேர்ந்து, அங்கே அநேக விருக்ஷங்கள் செழித்து வளர்வதைக் கண்டார்கள். கொழுந்து விட்டெரியும் அக்னி ஜ்வாலைகளைப் போல பல வகையான விருக்ஷங்கள், பொன் வெள்ளி, நவமணிகள் முதலியவைகளால் அமைக்கப்பட்ட புஷ்பங்களுடனும் இளந்தளிர்களுடனும் தங்க ஆபரணங்கள் அணிந்தது போல படர்ந்திருந்த கொடிகளுடனும் விளங்கின. தங்க மயமான விருக்ஷங்கள் வைடூர்யங்களுடன் பாலஸூர்யர்களைப் போல ப்ரகாசித்தன. ஓடைகள் இந்த்ர நீல வைடூர்யங்களைப்போல தெளிந்த ஜலத்தால் நிறைந்து, தங்கமயமான மீன்களும் ஆமைகளும் அதில் ஸஞ்சரிக்கப், பால ஸூர்யர்களைப் போன்ற தங்கத் தாமரைகளுடனும் அநேக பக்ஷிகளால் சூழப்பட்டு பார்ப்பவர்களுடைய ஸகல சரமத்தையும் போக்கின. தங்கம் வெள்ளிகளால் செய்த விமானங்களும் முத்து ஹாரங்கள் தொங்கவிட்ட பொன்மயமான ஜன்னல்களும், தங்கம் வெள்ளி ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட அநேக மேடைகளுடன் அநேக கிருஹங்களும் காணப்பட்டன. அங்கே பவழத்தைப் போலும் ரத்னங்களைப் போலும் ப்ரகாசிக்கும் புஷ்பங்களுடனும் பழங்களுடனும் விளங்கும் விருக்ஷங்களிலிருந்து பெருகும் தேனைத் தங்கமயமான வண்டுகள் எப்பொழு

துங் குடித்துக கொண்டிருநதன தஙகததாலும ரதனஙகளாலும விசிதரமாய வேலைசெய்யபபட்ட ஆஸனஙகளும படுக்கைகளும வாஹனங்களும, தஙகம வெளளி வெணகலம முதலிய பதாரததஙகளால செய்யபபட்ட அநேக பாதரஙகளும, அகில முதலிய பரிமள தரவயங்களும, சுததமான பழஙகளும கிழஙகுகளும, வேரகளும உததமமான பானஙகளும, விலையுயாநத வஸ்தரங்களும கமபளஙகளும தோலகளும அங்கஙகே நெருபபுமலைகளைபபோல குவிககப்பட்டிருககும தங்கமும காணபபட்டன.

பிறகு அஙகங்கே தேடிககொண்டு போகையில ஓரிடததில ஒரு ஸ்தரீயைக் கணடாாகள. அவள தபஸவி வேஷம தரிதது ஆஹார நியமததுடன வரதஙகளை அனுஷ்டிதது தேஜஸால ஜ்வலித்துககொணடிருநதாள் வானராகள அவளை பயததுடனும ஆசசர்யத்துடனும பாாததுககொண்டே நின்றாாகள ஆஞ்ஜனேயா அநத வயஸ்சென்றவளை நமஸகரிததுக் கைகூபபி "அம்மணி! தாஙகள் யாா? இநதக குஹையும இதிலுளள ஐசவாயஙகளும எவருடைய" தென்று கேட்டாா.

ஸாக்கம 51.

ரிக்ஷபிலத்தின் விருத்தாந்தம்.

பிறகு ஹனுமான் அவளைப பாாத்து "இருள் சூழநத இநதக் குஹையில நாஙகள ஆவலுடன பரவேசிததோம பசி தாஹம மேலிட்டுக களைததிருககிறோம. இஙகே ஜலம கிடைககுமென்று நமபி வநதோம இங்குள்ள ஆசசாயங்களைக்கண்டு எஙகளுககுப பயமும ஸநதேஹமும உண்டாகினறன. பால ஸூாயாகளைப போனற இநதத தஙகமயமான விருக்ஷஙகளும் சுத்தமான காயகனிகளும வேரகளும கிழங்குகளும, தஙகம வெளளி ரதனஙகளால் அமைககபபட்ட விமானங்களும கிருஹஙகளும முதது ஹாரஙகளால அலஙகரிககப்பட்ட காறறுப போககிகளும, அழகான புஷ்பங்களாலும பழஙகளாலும பரிமளததாலும விளஙகும, இநதத தஙகமயமான விருக்ஷஙகளும ஓடைகளில சுததமான ஜலததில பரகாசிககும தஙகத தாமரைகளும பொன மீனகளும யாருடையது. தாஙகள யாா தஙகளுடைய தபோபலம எப்படிபபட்டது. இநத அதபுதமான ஸதலம யாருடைய தபோமஹி

மையால் ஸிருஷ்டிக்கப்பட்டது எங்களுக்கு யாதொன்றும் தெரியாமையால் எங்களுடைய ஸந்தேஹத்தைத் தீர்க்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அப்பொழுது பரம தயாமூர்த்தியான அந்தத் தாபஸி, ஆஞ்ஜநேயரைப் பார்த்து, "மயனென்ற தானவன் மஹா தேஜஸ்வியும் மாயாவித்யையில் நிகரற்றவனுமென்று நீங்கள் கேட்டிருக்கலாம். இந்தத் தங்கமயமான வனத்தை அவன் மாயா சக்தியால் நிர்மித்தான். பூர்வத்தில் அவன் தானவர்களுக்குச் சிற்பியாயிருந்தான். இந்தக் கிருஹங்களையும் வனங்களையும் ஸிருஷ்டித்தவன் அவனே. அவன் ப்ரஹ்மாவைக் குறித்து நெடுங்காலம் தபஸ் செய்து, சுக்ராசார்யரால் உபதேசிக்கப்பட்ட சிற்பசாஸ்த்ர ஞானத்தை ஸம்பூர்ணமாய்ப் பெற்றான். அவன் இங்கே கொஞ்ச காலம் ஸுகமாய் வஸித்திருந்தான். பிறகு தன் புத்ரியான மந்தோதரியை ராவணனுக்கு விவாஹஞ் செய்து கொடுத்ததாலும், ஹேமையென்ற அப்ஸரஸிடத்தில், ரஹஸ்யமாய் விசேஷ ப்ரீதி வைத்திருந்ததாலும் இந்த்ரன் வஜ்ரத்தால் அவனை அடித்துக்கொன்றான். அவன் இறந்த பிறகு இந்த வனத்தை ப்ரஹ்மா ஹேமைக்குக் கொடுத்தார். நான் மேருஸாவர்ணியின் புத்ரி என்பெயர் ஸ்வயம்ப்ரபை. ஹேமை என்னுடைய தோழி. கீத நாட்யங்களில் திறமையுள்ளவள் இப்பொழுது ப்ரஹ்ம லோகத்திற்குப் போயிருக்கிறாள். இங்கே பிறர் வராமல் அவளுடைய சக்தியால் இதை வெகு ஜாக்ரதையாகக் காத்து வருகிறேன். உங்களுக்கு இங்கே என்ன வேலை? யாருக்காக இப்படி வனங்களில் திரிகிறீர்கள்? ஒருவர்க்குந் தெரியாத இந்தக் குஹை வாசலை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? இந்த ச்ரேஷ்டமான காய்கனிகளையும் கிழங்குகளையும் வேர்களையும் புஜித்து நோத்தியான பானங்களைக் குடித்து ச்ரமந்தீர்ந்த பிறகு உங்களுடைய விருத்தாந்தத்தைச் சொல்லுங்கள்" என்றாள். (விச்வகர்மா, மயன் என்ற பெயர்கள் கணங்களைக் குறிக்கும். ஆகையால் அந்த வேலையைப் பார்ப்பவர்கள் பலர் அவர்களில் ஒருவனை இந்த்ரன் கொன்றிருக்கலாம் அந்த வேலை பார்ப்பவனுக்கே அழிவற்றவனென்று சொல்லப்படும்.)

ஸர்க்கம் 52

வானரர்களின் வரலாறு

பிறகு அந்தத் தபஸ்வி "வானரர்களே! உங்களுக்குப் பசி தாஹம் களைப்பு முதலியவை தீர்ந்து நான் கேட்ட விஷயத்திற்குப் பதில் சொல்லலாமென்று தோன்றினால் அதைக் கேட்க விரும்புகிறேன்" என்றாள். அப்பொழுது ஹனுமான் நடந்த வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்.

"தசரதரென்ற அயோத்யா சக்ரவர்த்திக்கு ராமனென்ற ஓர் புத்ரனுண்டு. அவர் மஹேந்த்ரனுக்கும் இந்த்ரனுக்கும் ஸமானர். ஸகல லோகங்களுக்கும் அரசன். சில காரணங்களால் அவரும் அவருடைய மனைவி ஜானகியும் தம்பி லக்ஷ்மணனும் தண்டகாரண்யத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ராக்ஷஸாதிபதியான ராவணன் ஜனஸ்தானத்திலிருந்து ஸீதையைப் பலவந்தமாக எடுத்துப்போனான். ராமனுக்கு ஸுக்ரீவனென்ற ஒரு தோழனுண்டு. அவர் மஹாவீரன், வானராதிபதி, எங்களை அனுப்பினவர் அவரே. அகஸ்த்யருடைய இருப்பிடமாக யமனால் ரக்ஷிக்கப்படும் தெற்குத் திக்கில் இந்த வானர ஸைன்யத்துடன் போய் ராவணனையும் ஸீதையையும் தேடிக் கண்டுபிடியுங்களென்று எங்களுக்கு அவர் உத்திரவு செய்தார். அப்படி நாங்கள் எல்லாவிடங்களிலும் தேடிப் பார்த்துப் பசி தாஹம் மேலிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தோம். எல்லோரும் முகம்வாடிக் கவலைகொண்டு ஒன்றுந் தோன்றாமல் திகைத்தோம். பிறகு நான்கு திக்குகளிலும் பார்க்கும்பொழுது இந்தக் குஹையிலிருந்து நீர்ப்பறவைகள் ஜலத்தில் நனைந்து பறந்து வருவதையும், குஹையின் வாசலில் மரஞ் செடி கொடிகள் செழித்திருப்பதையும் பார்த்தோம்.

பிறகு இதில் போய்ப் பார்ப்போமென்றேன். இவர்கள் இங்கே ஆறு குளம் ஏரி ஏதாவதிருக்க வேண்டுமென்று ஊஹித்து, பரபுவின் காரியத்தைச் சீக்ரம் முடிக்கவேண்டுமென்ற ஆவலால் ஸம்மதித்தார்கள். பிறகு நாங்கள் ஒருவர்கொருவர் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, இருள் சூழ்ந்த இந்தக் குஹையில் புகுந்தோம். இதே எங்களுடைய விருப்பம். இதற்காகவே இங்கே வந்

தோம பசி தாஹததால பீடிககபபட்டு மெலிநது தஙகளைச சரண மடைந்தோம தாஙகள விசேஷ உபசாரததுடன எஙகளுககுக கொடுதத பழஙகளாலும கிழஙகுகளாலும திருபதியடைநதோம பசியால இறககும நிலைமையிலிருநத எஙகளைக காபபாறறி பராண தானஞ செய்த தஙகளுககு நாஙகள என்ன பதில உபகாரஞசெயய வேணடு"மென்று பராாததிததார.

அதறகு ஸவயமபரபை "நீஙகள நான செயத அதிதிபூஜை யைப பெறறுககொணடு, எனககுப பதில உபகாரஞ் செயயவேணடு மென்று விருமபினதே எனககு மிகுநத திருபதியைக கொடுககின றது. உததமமான தாமததை அனுஷ்டிததுவரும எனககுப் பிற ரால ஆகவேணடிய தொன்றுமில்லை" யென்றுள

ஸர்ககம் 53

வானரர்கள் துக்கிததது.

அதைக் கேட்டு ஆஞ்ஜநேயா, "ஸகல தாமஙகளையும் அறிநத தங்களையே சரணமடைந்தோம ஸுகரீவ மஹாராஜா எஙகளுககுக கெடுவிட்ட ஒரு மாஸகாலமும இந்தப பிலததிலேயே கழிநதுவிட டது இந்தக கோரமான ஸதானததிலிருநது எஙகளை வெளியில கொணடுபோயச சோககவேணடியது தங்களுடைய பொறுபபு. மஹாராஜாவின ஆககினையை மீறின்படியால உயிரிழநதோம. எங களைக காபபாறற வேணடும. எஙகளால ஒரு முக்யமான காாயம நடக்க வேணடியிருககிறது இந்தக் குஹையில வழி தபபித திரிநதுகொணடு அதையும செயயவில்லை" யென்று வேணடினா.

அதறகு அநதத தாபஸி "இதில வநதவாகள இங்கிருந்து உயிருடன வெளியில போக முடியாது ஆனால நான செயத கடுந தபஸின் மஹிமையால உஙகளை வெளியில கொணடுபோய விடுகி றேன சணகளை மூடிககொளளுஙகள கணகளைத திறநதுகொணடு இஙகிருந்து வெளியில போக முடியா"தென்றுள. அவாகள அபப டிச செயதாாகள. உடனே வெளியில கொணடுவரபபட்டாாகள. பிறகு அநத யோகினி "கவலைபபடவேணடாம. விநதயபாவதம இதோ தெரிகிறது பரஸரவணகிரி இதே. இதோ தெரிகிறது

ஸமுத்ரம் போய் வருகிறேன் உங்களுக்கு ஸகல க்ஷேமமுமுண்டா கட்டு'மென்று ஆசீர்வதித்துக் குஹைக்குள் திரும்பிப்போனாள் (கிஷ்கிந்தைக்கு ஸமீபத்தில் ராமன் வஸித்த மலை இதல்ல) பிறகு வானரர்கள் கோரமான தெற்கு ஸமுத்ரத்தையும் அதில் எப்பொழுதும் பெருங்காற்றால் அலைகள் கொந்தளித்துக்கொண்டிருப்பதையும் பார்த்து, விந்த்யபர்வதத்தின் தென்மேற்கு மூலையின் அடிவாரத்தில் கவலையுடன் உட்கார்ந்தார்கள் அங்கே வஸந்த காலத்திலுண்டாகும் புஷ்பங்களையும் பழங்களையும் பார்த்து ஸுக்ரீவன் குறிப்பிட்ட ஒரு மாஸமும் ரிக்ஷபிலத்தில் தேடிக்கொண்டிருக்கையில் தாண்டி விட்டதென்று அறிந்து, அவர்களுக்கும் பயம் அதிகமாயிற்று (கிஷ்கிந்தைக்கு வடக்கிலிருக்கும் விந்த்ய மலையின் தொடர்ச்சியே ஸஹ்யம் மலையமென்று தெற்கு ஸமுத்ரக்கரை வரையில் எட்டி யிருக்கும் —பேஷஜ்கல்பம்) வஸந்தருது ஸமீபித்து விட்டதென்றும், மஹாராஜாவின் உத்திரவின்படி திரும்பிப் போகவேண்டிய காலம் தாண்டிவிட்டதென்றும் அறிந்து, அவர்கள் பயந்து பூமியில் விழுந்தார்கள். அப்பொழுது புத்திமானும் மஹா வீரனுமான அங்கதன், வயஸாலும் ஆசாரத்தாலும், ஞானத்தாலும் மூத்தவர்களான அந்த வானரர்களைப் பார்த்து மதுரமாக "வானராதிபதியின் ஆக்ஞையால் இங்கே வந்தோம் நாம் ரிக்ஷபிலத்திலிருக்கும்பொழுதே அவர் கெடுவிட்ட ஒருமாஸமும் தாண்டிவிட்டதென்று உங்களுக்குத்தெரியாதா? நாம் பதினைந்து தினங்களுக்குள் வரவேண்டியதென்று ஐப்பசிமாஸத்தில் மஹாராஜா ஹனுமானுடைய யோசனையைக் கேட்டு நமக்கு உத்திரவு செய்தார். பிறகு மார்கழி மாஸத்தில் லக்ஷ்மணனால் தூண்டப்பட்டு பத்து நாள்களுக்குள் வந்து சேரவேண்டுமென்று கட்டளையிட்டார். (இதுவரையிலும் இது சொல்லப்படவில்லை). பிறகு ஸீதையைத் தேடுவதற்குத் தைமாஸம் முடிவுவரையில் கெடுவிட்டு அனுப்பினார். இப்படி ஐப்பசி முதல் இந்த விஷயத்தைப்பற்றி காலத்தைக் கவனித்துக்கொண்டு வருகிற நமக்கு இப்படி மறந்திருப்பது ந்யாயமா? நீங்களெல்லோரும் மஹாராஜா விடத்தில் மிகுந்த விச்வாஸமுள்ளவர்கள், நீதி மார்க்கத்தில் நிபுணர்கள், ப்ரபுவின் க்ஷேமத்தையே கோருகிறவர்கள், எல்லா கார்யங்களிலும் ஸமர்த்தர்கள், கார்யங்களைச்செய்து முடிப்பதில் ஒப்பற்றவர்கள், மஹா ராஜாவின் கட்டளையின்படி என்னை முன்னிட்டுக்கொண்டு வந்தீர்கள் அவருடைய ஆக்ஞையைமீறி எவன் ஸௌக்யப்படுவான் நாம் கொல்லப்படுவோமென்பது நிச்சயம். கெடுவிட்டகாலம் தாண்டினபடியால் நாம் இங்கேயே உபவாஸஞ்செய்து உயிரை விடுவோம்.

ஸுக்ரீவன் கடுமையான ஸ்வபாவத்தை உடையவர், மேலும் இப்பொழுது நமக்கு மஹாராஜா அபராதிகளான நம்மை மன்னிப்பாரா? ஸீதையின் வரலாற்றைத் தெரிந்துகொண்டுபோனாலும் ஒருவேளை மன்னிப்பார் காலம் சென்று விட்டாலும் பாதகமில்லை இப்பொழுது நாம் காரியத்தையும் முடிக்காமல் காலம் சென்றுவிட்ட பிறகும் போய்ச் சேர்ந்தால் நம்மைக் கொல்வதில் தடையென்ன? ஆகையால் பெண்டுபிள்ளை தனதான்யம் முதலியவைகளை விட்டு இங்கேயே உபவாஸத்தால் ப்ராணனை விடுவது நலம் திரும்பிப் போனால் எல்லோரும் சாவோம் அங்கே போய் மடிவதைவிட இங்கே உபவாஸத்தால் இறப்பது மேலல்லவா? நாம் அபராதிகளான தால் நாம் செய்த குற்றத்திற்கு வேறு பரிஹாரமில்லை 'உன்னை யுவ ராஜாவாகச் செய்த ஸுக்ரீவன் இப்பொழுது கொல்வானு'வென்றால் என்னிடத்திலுள்ள ப்ரீதியால் எனக்குப் பட்டங்கட்டினாரோ? மஹாத்மாதமாவான ரகுவீரனுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டல்லவா அப்படிச் செய்தார் இப்பொழுது நான் செய்த குற்றத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு என்னிடத்தில் அவருக்கு முன்னமே உள்ள பகையை அவர் தீர்த்துக்கொள்வார் இதில் ஸந்தேஹமில்லை. என் மித்ரர்களான உங்களுக்கு நான் மரணமடைவதைப்பார்ப்பதில் விசேஷ துக்கத்தைத் தவிர வேறென்ன? ஆகையால் புண்யஸ்தலமான இந்த ஸமுத்ரத்தில் படுத்துப் பட்டினியிருந்து உயிரைவிடுவோ"மென்றான்

அதைக் கேட்டு எல்லோரும் "ஸுக்ரீவன் க்ரூர ஸ்வபாவமுள்ளவர். ராமனோ ஸீதையிடத்தில் விசேஷ ப்ரீதி வைத்தவர். ஸீதையின் வரலாற்றை அறியாமல் நாம் அங்கே போனால் ராமனுடைய கோபத்தைத் தணித்து அவரைத் திருப்திசெய்ய விரும்பிக், 'கொஞ்சமேனும் யோசிக்காமல் ஸுக்ரீவன் நம்மெல்லோரையும் கொல்வார். குற்றஞ் செய்தவர்கள் யஜமானனுடைய கண்ணில் படலாமா? ஆகையால் இங்கேயிருந்தே ஸீதையைத் தேடிக் கண்டுபிடித்துப் பிறகு ஸுக்ரீவனிடத்திற்குப் போவோம். முடியாவிட்டால் யமலோகத்திற்குப் போவோ"மென்று பயத்தால் தீனமாகக் கூச்சலிட்டார்கள்.

அப்பொழுது தாரன், "உங்களுக்கு இஷ்டமிருந்தால் நாம் ரிக்ஷபிலத்தில் புகுந்து ஸுகமாக வஸிப்போம். நாம் விரும்பக் கூடிய ஸகல பதார்த்தங்களும் அங்கே வேண்டிய வரையில் கிடைக்கும். மாயையால் அது அமைக்கப்பட்டதால் இந்த்ரனும் ராமனும்

ஸுக்ரீவனும் நம்மை என்ன செய்ய முடியு?”மென்றான். வானரர்களெல்லோரும் அங்கதனுடைய யோசனையைவிட இது நல்லமென்று கண்டு “எப்படியாவது நாங்கள் யாதொரு உபத்ரவமுமில்லாமல் ஸுகமாக வஸிக்கும் வழியைத் தேடுங்க”ளென்று ப்ரார்த்தித்தார்கள்.

ஸர்க்கம் 54.

ஹனுமார் ஆக்ஷேபித்தது.

தாரன் சொன்னதைத் தடுக்காததால் அங்கதன் அதை ஒப்புக்கொண்டதாக ஹனுமான் நினைத்து வானர ராஜ்யத்தை ஆளும் திறமை அவனுக்குப் பூர்ணமாக இருக்கிறதென்று அறிந்தார் அது ஸுக்ரீவனுக்குக் கிடைக்காதென்று நிச்சயித்தார். பிறர் சொல்வதைச் சீக்ரத்தில் க்ரஹிப்பது, அதைப் புத்தியில் பதிப்பது, அதை மறவாதிருப்பது, அதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் திறமை, யுக்தியாகப் பேசுவது, பிறருடைய யுக்திகளைக் கண்டிப்பது, பிறர் சொல்லும் வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தை அறிவது, விஷயங்களின் உண்மையான கருத்தைக் கண்டுபிடிப்பதென்ற புத்தியின் எட்டு உத்தம குணங்களும், தேஹபலம், தைர்யம், உபாயம், பந்து பலமென்ற நான்குவித பலங்களும், தேச காலஞானம், மனவுறுதி, துக்கங்களைப் பொறுப்பது, விஷயங்களை அறிவது, திறமை, பலம், தன் ஆலோசனை வெளிப்படாமல் காப்பது, முன்பின் விரோதமில்லாமல் நடப்பது, உத்ஸாஹம், பிறருடைய திறமையை அறிவது, நன்றி, சரணமடைந்தவர்களிடத்தில் கிருபை, பொறுமை, சபலமற்றிருப்பதென்ற பதினான்கு உத்தம புருஷ லக்ஷணங்களும் அவனிடத்தில் பொருந்தி யிருப்பதையும், சுக்லபக்ஷத்துச் சந்த்ரனுடைய தேஜஸும் அழகும் வரவர வளர்வதுபோல் அவனுடைய தேஜஸ் பலம் பராக்ரமம் முதலியவை வரவர வளர்கின்றனவென்றும்: புத்தியில், தேவகுருவையும் பராக்ரமத்தில் வாலியையும் போன்றவனென்றும் தெரிந்துகொண்டார் அவன் ஸகல சாஸ்த்ர நீதிகளை அறிந்தவன். பரபுவின் விஷயத்தில் மிகவும் உழைத்தவன், ஆனாலும் பிருஹஸ்பதியின் ஆலோசனையைத் தேவேந்த்ரன் சரத்தையோடும் பக்தியோடும் கேட்பதுபோல் தாரனுடைய யோசனையை அப்பொழுது

அங்கதன கேட்பதைதககண்டு ஹனுமான, ஸாம தான பேத, தண்ட மென்ற நானகு உபாயங்களில பேததததால வானரர்களுடைய புததியைத திருபபித தனககு அனுகூலமாகச செயய முயனறா. அவர்கள் ஒற்றுமையிலலாமல பல பல யோஜனைகளைச செய்யுமபடி அவா களைக கலைததுப் பிறகு அஙகதனுககுப பயமுணடாகும வாாத்தைகளைச சொன்னா.

"யுததத்தில வாலியைக் காட்டிலும நீ திறமையுள்ளவன. புததியில் தாரைககு ஸமானன, வாலியைப் போல இநத வானர ராஜ்யததைத திறமையுடன் ஆளககூடியவன. ஆனால நீ கிஷகிநதையிலிருநதாலும ரிக்ஷபிலததிலிருநதாலும வானராகள உனக்குககட்டுபபடுவாாகளெனபது நிசசயமிலலை குரஙகுகள ஸ்வபாவமாக சபலசிததமுளளவாகளெனபது உனககுத தெரியாதா? மேலும பெண்டு பிளளைகளையும் தனதானயங்களையும ஸுகரீவனுடைய வசததில விடடு, உனனுடன ரிக்ஷபிலததில வஸிபபாாகளா? உனனைக் காட்டிலும அதிக பலசாலிகளானதால உன ஆக்ஞைககு உட்படமாட்டாாகள் ஜாம்பவான நீலன ஸுஹோதரன முதலியவாகளையும எனனையும ஸுகரீவனிடததிலிருநது எநத உபாயததாலும இழுகக முடியாது. இதை எல்லோருடைய முன்னிலையிலே சொலலுகிறேன 'நீஙகளெலலோரும போஙகள. நான ஒருவனே இஙகிருககிறே' னெனபாயோ? பலசாலி பலஹீனனுடன பகைதது ஸௌகாயமடையலாம. பலஹீனன பலசாலியுடன பகைபபது நயாயமலல. ஆகையால பலமிலலாதவன தன நனமையைக கோரினால பலவானுடன ஒருபொழுதும் பகைககககூடாது. 'நான பலஹீனனா யிருநதாலும கோட்டையின பலமிருநதால என்னை வெலலமுடியாதெனபாயோ? ரிக்ஷபிலததில ஒருவரும வரமுடியாதென்பாயோ?' லக்ஷ்மணன இதை ஒரு பாணததால விளையாட்டாகப பிளநதுவிடுவார். ராமனைப பற்றிச சொலலவும வேண்டுமா? முனபு இநதரன வஜ்ராயுததததால இநதக குஹை தவாரததை ஏறபடுததினான லக்ஷ்மணனோ கூரமையான பாணங்களால இநதக குஹையை உலாநத சரகைப போல துளைபபாா இவ்வகையான பாணஙகள அவரிடததில பலவுண்டு அவை வஜராயுதததைப போல மலைகளைப பொடியாககும. நீ இநதக குஹையில வஸிகக நிசசயிதத அடுதத க்ஷணததிலேயே இநத வானராகள உன்னை விடடு ஓடிபபோவார்கள். இதில ஸநதேஹமிலலை பெண்டுபிளளைகளை எபபொழுதும நினைததுககொண்டு, ராமலக்ஷ்மணர்களிடத்திலும ஸுக்ரீவனிடததிலும எப்பொழுதும

பயந்துகொண்டு, ஸகல ஸுகங்களையும் எப்பொழுது அனுபவிப்போமென்று ஏக்கங்கொண்டு, உன்னுடனிருந்து அனுபவிக்கவேண்டிய துக்கங்களை நினைத்து, உன்னைவிட்டு ஓடிப்போவார்கள். பிறகு நீ மித்ராக்களுமில்லாமல் உன் ஹிதத்தைத் தேடும் பந்துக்களுமில்லாமல், புல் அசைந்தாலும் அதைக் கண்டு சத்ரு வந்து விட்டானோ வென்று ஒவ்வொரு க்ஷணத்திலும் நடுங்குவாய். மஹா வேகமுள்ள லக்ஷ்மணனுடைய பாணங்கள் உன்மேல் விழுந்து உன்னைக் கொல்லாதிருக்கவேண்டுமே. ஆனால் நீ எங்களுடன் மஹா ராஜாவிடத்திற்குப் போய் வினயமாக நடந்துகொண்டால் குலக்ரமமாக உன்னை ராஜ்யத்தில் அபிஷேகஞ் செய்வார். தர்மத்தை அனுஷ்டிப்பதில் அவர் நோக்கமுள்ளவர். உன் தகப்பனுடன் பிறந்தவர், உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதில் கவலைகொண்டவர், சொன்ன வார்த்தை தவறாதவர், சுத்தமான நடத்தையுள்ளவர், கபடமில்லாதவர், உன் தாய்க்கு ப்ரியமான விஷயத்தையே செய்கிறவர் அதற்காகவே பிழைத்திருக்கிறவர், ஆகையால் உன்னைக் கொல்லமாட்டார். நீ பயமில்லாமல் எங்களுடன் வரலா"மென்றார்.

ஸர்க்கம் 55.

வானரர்கள் ப்ராயோபவேசஞ் செய்தது.

இப்படி ஹனுமான் மதுரமாயும் தாமமாயும் ஸுக்ரீவனைப் புகழ்ந்து சொன்னதைக் கேட்டு அங்கதன் "ஆஞ்ஜநேய! ஸ்திர புத்தி, சுத்தமான மனஸ், க்ரூர மில்லாமை, ஆத்ம சுத்தி, கபடமின்மை, பராக்ரமம், தைரியம் முதலிய குணங்கள் ஸுக்ரீவனிடத்திலில்லை. தமயனுடைய பாரியை தனக்குத் தாயல்லவா? அவன் பிழைத்திருக்கும்பொழுதே அவனுக்கு ப்ரியமான பாரியையைக் கைப்பற்றுகிறவனுக்கு ஆத்ம சுத்தியாவது மனஸ்சுத்தியாவது இருக்குமா? என் பிதா மாயாவியுடன் குஹையில் யுத்தஞ் செய்யும்பொழுது அதன் த்வாரத்தை மூடினவன் க்ரூரஸ்வபாவமில்லாதவனென்று எப்படிச் சொல்லமுடியும்? அக்னிஸாக்ஷியாய் ராமனுக்குக் கை யடித்துக் கொடுத்து, அவரிடத்தில் ஒப்பில்லாத உபகாரத்தைப் பெற்று, அவர் விஷயமாய்ச் செய்த ப்ரதிக்ஞையை மறந்தவன், எவன் செய்த உபகாரத்தை நினைக்கப் போகிறான்? அவனிடத்தில் கபடமென்ற

தோஷம் நன்றாய் விளங்கவில்லையா? ஸைன்யங்களை வரவழைத்து ஸீதையைத் தேட அனுப்பினது அதர்மத்திற்குப் பயந்து செய்ததல்லவே! லக்ஷ்மணனுடைய பாணங்களுக்குப் பயந்து செய்ததல்லவா? இது ஒரு தர்மமா?

அவன் பாபி, நன்றியற்றவன், சஞ்சல ஸ்வபாவமுடையவன், மறதியுள்ளவன், இப்படிப்பட்டவனிடத்தில் மேன்மையான ஸ்வபாவமுள்ள எவனாவது நம்பிக்கை வைப்பான்? நான் அவனுக்குத் தாயாதி, அவனுக்குப்பிறகு பட்டத்தை அடையவேண்டியவன் எனக்குப் பிழைக்க ஆசையிருந்தால் அவனை நம்பலாமா? 'உன்னை யுவராஜாவாக அபிஷேகஞ் செய்யவில்லையா'வென்றால், அரசர்கள் தனக்குப்பிறந்த புத்ரனுக்குப் பட்டங்கட்டுவார்கள். அவன் குணசாலியாயிருந்தாலும் குணங்களில்லாதவனாயிருந்தாலும் கவனிக்கமாட்டார்கள். சத்ரு குலத்தில் பிறந்த என்னை உயிரோடு வைப்பானா? நான் அவனுக்கு அபகாரஞ் செய்தவன், பலஹீனன், அநாதை, அவனுக்கு விரோதியென்பதைப் பிறர்க்குத் தெரியும்படி சொல்லியும்விட்டேன். உங்களுடன் நான் கிஷ்கிந்தைக்கு வந்து உயிர் தப்புவேனா? ஸுக்ரீவன் க்ரூரன், இரக்கமற்றவன், ரஹஸ்யமாய்க் கெடுதி செய்பவன், ராஜ்யத்தை ஆளுவதற்கு நான் இடையூறாயிருக்கிறேனென்று என்னைக் காவலில் போடுவான் அதைக் காட்டிலும் இங்கேயே ப்ராயோபவேசத்தால் உயிரை விடுவது நலமல்லவா? நீங்களெல்லோரும் திரும்பிப் போங்கள். நான் உங்களுடன் கிஷ்கிந்தைக்கு வருவதில்லை. இது ஸத்யம்.

இங்கேயே ப்ராயோபவேசஞ் செய்வேன். நான் மரணமடைவதே எனக்கு க்ஷேமம். ராம லக்ஷ்மணர்களையும் என் சிறிய தகப்பனான ஸுக்ரீவனையும் நான் நமஸ்கரித்து க்ஷேமம் விசாரித்ததாகச் சொல்லுங்கள் என் தாயையும் ருமையையும் நான் ஆரோக்கியத்தையும் க்ஷேமத்தையும் விசாரித்ததாகச் சொல்லுங்கள் என் தாய் எனக்காக வருந்தாதபடி தேற்றுங்கள் என்னிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவள், இரக்கமுள்ளவள், பர்த்தாவையிழந்து மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தவள், நான் இங்கே மரணமடைந்ததைக் கேட்டு நிச்சயமாய் உயிரை விடுவா''ளென்று ஜாம்பவான் முதலிய பெரியோர்களுக்கு நமஸ்காரஞ் செய்து பூமியில் தர்ப்பைகளைப் பரப்பி அழுதுகொண்டே அவைகளின்மேல் படுத்தான்.

அதைக்கண்டு, ஸகல வானரர்களும் கண்ணீர் பெருக, வாய்விட்டலறி, ஸுக்ரீவனைத் தூஷித்து; வாலியைப்புகழ்ந்து, அங்கதனைச் சுற்றி,—தாங்களும் ப்ராயோபவேசஞ் செய்ய யத்தனித்தார்கள்

இப்படி அங்கதன் ப்ராணனை விட நிச்சயித்ததைப் பார்த்து, வானர ச்ரேஷ்டர்களும் கைகால்களைக் கழுவி ஆசமனஞ் செய்து, "நமது யஜமானனான அங்கதன் இறக்கும்பொழுது அவரைவிட்டு நாம் கிஷ்கிந்தைக்குச் செல்வது ந்யாயமா? நாமும் அவருடன் இறப்பது நல்"லென்று ஸங்கல்பஞ் செய்து, ஸமுத்ரத்தின் வடகரையில் தெற்கு நுனியாய்ப் போடப்பட்ட தர்ப்பங்களில் கிழக்கு முகமாய் உட்கார்ந்தார்கள். பிறகு ராமன் தண்டகாரண்யத்திற்கு வந்ததையும் தசரதர் மரணமடைந்ததையும், ஜனஸ்தானத்தில் கரதூஷணர்கள் மடிந்ததையும், ஜடாயுஸ் முக்தி யடைந்ததையும், ஸீதை அபஹரிக்கப்பட்டதையும், வாலி உத்தமகதி பெற்றதையும், ராமன் ஸுக்ரீவனிடத்தில் கோபித்ததையும், சொல்லித் துக்கித்தார்கள் மஹா பர்வத சிகரங்களைப் போன்ற அந்த வானரர்கள் நீருண்ட மேகங்களைப் போல் கர்ஜித்ததால், அந்த மலையிலுள்ள குஹைகளிலிருந்து பயங்கரமாய் ப்ரதித்வனி உண்டாயிற்று, அது அவர்களுக்கு விசேஷ பயத்தை உண்டாக்குவதற்கு ஒரு காரணமாயிற்று.

ஸர்க்கம் 56

ஸம்பாதி.

வானரர்கள் எந்த மலைச் சாரலில் ப்ராயோபவேசஞ் செய்ய உட்கார்ந்தார்களோ அங்கே ஸம்பாதி யென்ற ஒரு கழுகு வந்தது. அவன் சிரஞ்சீவி. கழுகுகளுக்கெல்லாம் அரசன்; ஜடாயுவிற்குத் தமயன், பல பராக்ரமங்களால் கீர்த்தி பெற்றவன், அவன் விந்த்ய பர்வதத்தின் ஒரு குஹையிலிருந்து வெளிக்கிளம்பி, வானரக் கூட்டங்கள் உட்கார்ந்திருப்பதைக்கண்டு ஸந்தோஷமடைந்து, "என்ன ஆச்சர்யம்! வெகு நாளாய் ஆஹாரமில்லாமல் வருந்தும் எனக்கு இன்றைக்குப் பூர்ணமான போஜனம் வலுவில் வந்திருக்கிறது. தைவம் ஜீவன்களுடைய யோக க்ஷேமத்தை அவைகளுக்குத் தகுந்தபடி ஸம்பாதித்து வைக்கிறது. இந்த வானரர்கள் ஒவ்வொருவரும் ஆஹாரத்திற்குத் தகுந்தவர்களே. ஆனாலும் இவர்களுக்குள் ச்ரேஷ்டமானவர்களை ஒவ்வொருவராய்க் கொன்று தின்பே"னென்றான்.

அதைக் கேட்டு அங்கதன் மிகவும் வருத்தமடைந்து ஹனுமாரைப் பார்த்து, "யமன் இந்தக் கழுகின் ரூபத்தைத் தரித்து வானரர்களைக் கொல்வதற்காக இங்கே வந்திருக்கிறான். ராமனுடைய

காரியம் முடியவில்லை ஸுக்ரீவனுடைய ஆஜ்ஞையும் நிறைவேற வில்லை நமக்குத்திடமரென்று இந்த ஆபத்து எப்படியோ நேர்ந்ததே ஸீதையை ராவணனிடத்திலிருந்து தப்புவிப்பதற்காகக் கழுகுகளுக்கு அரசனான ஜடாயுஸ் செய்த காரியத்தை நீங்கள் கேட்டிருக்கலாமே. ராமனிடத்தில் விளங்கும் ஸ்நேஹத்தாலும் கருணையாலும் கட்டுப்பட்டு, ஸகல ப்ராணிகளும் பசு பக்ஷிகளாயிருந்தாலும் நம்மைப் போல் ப்ராணனைக் கொடுத்தாவது ராமனுக்கு ப்ரியத்தைச் செய்கின்றன. தாமங்களை யறிந்த ஜடாயுஸ் ராமனுக்கு உபகாரஞ் செய்வதற்காகத் தன்னுயிரைக் கொடுத்தது, அவருக்குத் திருப்தி செய்தார் நாமும் அவருடைய காரியத்தை முடிப்பதற்காக இந்தக் காடுகளிலும் மலைகளிலும் ஸீதையைத் தேடிக் களைத்தோம். ஜானகியைக் காண வில்லை இப்பொழுது உயிரை விடப்போகிறோம் ராவணனால் மரணமடைந்த ஜடாயுஸ் பாக்யசாலி, அவருக்கு ஸுக்ரீவனால் யாதொரு பயமுமில்லை. (ஸுக்ரீவன் வனத்தில் வஸிக்கும் ப்ராணிகளுக்கெல்லாம் அரசன்) உத்தமமான கதியையும் அடைந்தார் ஜடாயுஸ் இறக்காவிட்டால் ஸீதை அபகரிக்கப்படுவாளா? ஒரு முஹூர்த்தம் ராவணனை நிறுத்தி வைத்திருந்தால் ராமன் வந்திருப்பார். அப்பொழுது ராவணன் தப்புவானு? தசரதர் அவ்வளவு சீக்ரமாய் இறக்காமல் இன்னும் சில தினங்கள் பிழைத்திருந்தால் ராமனை வனத்திலிருந்து அழைத்து வந்திருப்பார். ஜடாயுஸ் மரணமடைந்ததாலும் தசரதர் இறந்ததாலும் ஸீதை அபஹரிக்கப்பட்டதாலும் நாம் ப்ராணனை யிழக்கும்படி நேர்ந்தது. ராமலக்ஷ்மணர்களும் ஸீதையும் வனத்தில் வஸிக்கும்படி நேர்ந்ததும், ராமனுடைய பாணத்தால் வாலி மரணமடைந்ததும், ராமனுடைய கோபத்தால் கரதூஷணாதி ராக்ஷஸர்கள் நாசமடைந்ததும் கைகேயிக்குத் தசரதர் வரங்கொடுத்ததாலுண்டானதே யொழிய வேறல்ல''வென்று அங்கதன் சொல்வதைக் கேட்டும், வானரர்கள் பூமியில் படுத்து ப்ராயோபவேசஞ் செய்ததைப் பார்த்ததும், ஸம்பாதி மனம்நொந்து, தீன ஸ்வரத்துடன், "என் ப்ராணனைக்காட்டிலும் எனக்கு ப்ரியமான தம்பி ஜடாயுஸ் இறந்தானென்று சொல்லி, என் மனதை நடுங்கச் செய்கிறவன் யார்? ஜனஸ்தானத்தில் ராவணனுக்கும் ஜடாயுவிற்கும் யுத்தம் நடந்த காரணமென்ன? என் தம்பியின் பெயரைக் கேட்டு வெகு நாளாயிற்று. என்னை இந்த மலையிலிருந்து இறக்கிவிடுங்கள். சிரஞ்ஜீவியான என் தம்பி பல பராக்ரமத்தால் கீர்த்திபெற்றவன், மஹா குணசாலி, இவ்வளவு காலங்கழித்து அவனுடைய விருத்தாந்தத்தைக் கேட்டு ஸந்தோஷமடைந்தேன். ஜனஸ்தானத்தில் வஸித்துவந்த அவன் மரணமடைந்த விஷயத்

தைக் கேட்க விரும்புகிறேன் பெரியோர்களிடத்தில் பக்தியுள்ள ராமன் தசரதருக்கு மூத்த புத்ரனல்லவா? அவர் ஜடாயுவிற்கு எப்படித் தோழனானார்? என் இறக்கைகள் ஸூர்ய கிரணங்களால் கொளுத்தப்பட்டதால் நான் பறக்கச் சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆகையால் என்னை இங்கிருந்து இறக்கிவிடுங்க” ளென்றான்.

ஸர்க்கம் 57.

அங்கதன் பதில் சொன்னது.

சோகத்தால் தழுதழுத்த குரலுடன் ஸம்பாதி இப்படிச் சொல்வதை வானரர்கள் கேட்டும், “ஒவ்வொருவராய்க் கொன்று தின்பே” னென்ற வார்த்தையால் அவனிடத்தில் ஸந்தேஹங்கொண்டு, “நம் மெல்லோரையும் இவன் நிச்சயமாய்க் கொல்வான். நாம் ப்ராயோபவேசஞ்செய்யும்பொழுது இவனால் மரணமடைந்தால் நமக்கு நஷ்டமென்ன? சீக்ரத்தில் நமது உத்தேசம் நிறைவேறு” மென்று முடிவு செய்தார்கள்.

அப்பொழுது அங்கதன் ஸம்பாதியைப் பர்வதசிகரத்திலிருந்து இறக்கி “முன்பு ரிக்ஷரஜஸென்ற வானராதிபதி ஒருவரிருந்தார். அவர் மஹா கீர்த்திசாலி, தாம்வான், எனக்குப்பாட்டனார். அவருக்கு வாலி ஸுக்ரீவனென்று இரண்டு புத்ரர்கள் அளவற்ற பலசாலிகளாய்ப் பிறந்தார்கள். என் பிதாவான வாலி பலத்திலும் பராக்ரமத்திலும் லோகத்தில் விசேஷ ப்ரஸித்தியடைந்தார். ஒரு ஸமயத்தில் ஸகல லோகநாதனான ராமன் இக்ஷ்வாகு குலத்தில் தசரதசக்ரவர்த்திக்குக் குமாரனாய்ப்பிறந்து அளவற்ற ஐச்வர்யத்தாலும் வீர்யத்தாலும் புருஷோத்தமனாய் விளங்கினார் அவர் பெரியோர்களுடைய தாமத்தை அநுஸரித்துப் பித்ருவாக்ய பரிபாலனஞ் செய்வதற்காக லக்ஷ்மணனோடும் ஸீதையோடும் தண்டகாரண்யத்தில் ஸஞ்சரித்தார். அவர்கள் ஜனஸ்தானத்தில் வஸித்துக்கொண்டிருக்கையில் ராக்ஷஸேச்வரனான ராவணன் ஸீதையைப் பலாத்காரமாய் அபஹரித்தான். தசரதருக்குப் பரமமித்ரனான ஜடாயுஸ் அந்த ராக்ஷஸன் அவளை ஆகாசமார்க்கமாய்க் கொண்டுபோவதைக் கண்டு, அவனுடன் யுத்தஞ் செய்து அவனுடைய ரதத்தையும் கவசத்தையும் ஆயுதங்களையும் ஒடித்து, ஸீதையைத் தப்புவிக்க முயன்றார். ஆனால்

வயஸ செனறவரானதாலும யுததஞசெயது களைததாலும ராவ ணன அவரை வெட்டிக கொனறுன பிறகு ராமன அஙகே வநது அவருககு ஸகல ஸமஸகாரஙகளையும செயது, உததம கதியை அனுகரஹிததார பிறகு ராமன என சிறிய தகபபனுன ஸுகரீவ னுடன ஸநேஹஞசெயது வாலியைக கொனறுா ஸுகரீவனும அவருடைய மநதரிகளும என பிதாவிறகு விரோதிகள பிறகு ஸுகரீவனை வானர ராஜாவாய நியமிததார அவரும ஸீதையைத தேடுமபடி ஸகல வானரரகளையும அனுபபினுா ராமனுடைய ஆகஞைபபடி ஸீதையை அஙகஙகே நாஙகள தேடியும, ராததரி யில ஸுாய பரகாசததைக காண முடியாததுபோல, அவளைக கணடுபிடிககவிலலை தணடகாரணயம முழுவதையும வெகு ஜாகர தையாயத தேடி வழிதபபி, மயனுல ஸிருஷடிககபபட்ட ஓா குகை யில பரவேசிததோம அஙகே ஒரு மாஸம வரையில தேடித திரிந ததால மஹாராஜா எஙகளுககுக கெடுவிட்ட காலம செனறுவிட டது இனிமேல நாஙகள கிஷகிநதைககுச செனறுல ராமலக்ஷம ணாகளுடைய கோபததிறகும ஸுகரீவனுடைய கருரமான தணட னைககும பாததரமாயக கொலலபபடுவோம. ஆகையால இஙகேயே உயிரை விடுவது நலமெனறெணணி பரயோபவேசஞ செயதுகொ ணடிருககிறோ"மெனறுன.

ஸர்ககம் 58

ஸம்பாதி ஸீதையிருக்குமிடத்தைத் தெரிவித்தது.

இபபடி வானராகள உயிரில ஆசையைவிட்டுத தீனமாயச சொனன வாரத்தைகளைக கேட்டு, ஸமபாதி கணணீா பெருககி, அவாகளை நோக்கிப "பலவானுன ராவணனுல கொல்லபபட்டானெ னறு நீஙகள சொலலும ஜடாயுஸ எனபவன எனககுத தமபி. நானே வயஸ செனறவன, எனககு இறககைகளிலலை, ஆகையால ராவணனை இதறகாகப பழிவாஙக இபபொழுது எனககுச சகதி யிலலை, பொறுமையோடு கேட்டுக் கொணடிருபபதைதத தவிர வேறு எனன செயவேன? முன காலததில இநதரன விருததராஸுரனைக கொனறபொழுது நானும ஜடாயுஸுமநலல யௌவனததையிலிருந தோம. ஒருநாள எஙகளில யாா உயரமாயப் பறககககூடுமெனறு பநதயம போட்டுககொணடு ஒருவரையொருவா ஜயிகக வேணடு

மென்ற எண்ணத்துடன ஜ்வலிககும ஸூர்யனைச சுற்றி அதிவேக மாயப பறநதோம அவா ஆகாசததின மததியில வநதபொழுது, ஜடாயுஸ் உஷ்ணாந தாங்காமல தபிபபதைக கணடு, நான அவனிடத தில வைதத ஸ்நேஹததால என் இறகைகசளைக கொண்டு அவனை மூடினேன உடனே ஸூாய தேஜஸால அவை கொளுததபபடடு அஙகிருநது விநதய மலையில விழுநதேன அது முதல இஙகே வஸித்துக கொணடிருககிறேன. பிறகு ஜடாயுவின விருததாநதம எனககுத தெரியா”தெனறான.

அதைக் கேட்டு அஙகதன, “நீா ஜடாயுவின தமயனெனபது வாஸ்தவமானால அவரைக் கொனற ராவணனைக கொலல வேண்டாமா? அதறகு இபபொழுது சகதியறறிருநதாலும, அவனிருக்குமிடததையாவது உமககுத தெரிநதால சொலலும வரும கெடுதியை அறியாத அநத மூடன ஸமீபததில வஸிககிறானா? அலலது நெடுந தூரததிலிருககிறானா? ”வெனறு கேட்டான.

அதற்கு ஸமபாதியும “வானராகளே! வயஸ சென்று இறக்கைகளற்ற நான் வீாயமறறவன. ஆகையால ராமனுடைய காரியததில கூடியவரையில வாகஸஹாயம செயகிறேன. இநத பரஹமாண்டததிலுள்ள பதினைகு லோகங்களும எனககு நனறாயத தெரியும். தேவாஸுர யுததஙகளையும, அமிருததைதறகாகப பாறகடலைக கடைநததையும பாாததேன் ஒரு நாள ராவணன ஸகல ஆபரணங்களாலும அலஙகரிககபபடட அதிரூபவதியான ஓா யௌவன ஸ்த்ரீயை எடுததுக்கொணடு ஆகாசததில போவதைக கண்டேன் அவள ‘ராம! லக்ஷ்மண!’வெனறு கதறிககொணடும ஆபரணங்களைக கழற்றி வீசிநதுகொணடும காலகைகளை உதறிககொணடுமிருநதாள கறுதத மலையில அடிககும ஸூாய கிரணஙகளைப போலும, நீருண்ட மேகத்தில பாயும மினனலைப போலும, அநதத துஷ்டனுடைய கறுதத சரீரததில அநத ஸதரீயின வெணபட்டு விளஙகிறறு. அவள ராமனைக கூபபிடடுக கொணடிருநததால ஸீதையாயிருககுமெனறெண்ணுகிறேன. அநத ராக்ஷஸனிருககுமிடததைச சொலலுகிறேன, கேளுங்கள. அவன விசரவஸின புதரன, குபேரனுக்குத தம்பி, லங்காதவீபததிலிருககிறான. அது இஙகிருநது நூறு யோஜனைககப பால தெரிகிறது, பாருங்கள, விசவகாமாவால ஸிருஷ்டிக்கபபடடது, தங்கவாசற்படிகளும விசிதரமாக வேலை செயயபபட்ட தங்கமேடைகளும ஸூாயனைப போல ஜவலிககும தஙகபராகாரங்களும கணணைப பறிககினறன அங்கே ஸீதை ராவணனுடைய அநதபபுரததில ராக்ஷஸிகளால காககபபடடுத தீனமாக உடகாாநதிருககிறாள. நானகு

பக்கங்களிலும ஸமுதரததால நனறுகக் காககப்பட்ட அநத லங கைககுப போனறல ஜனகபுதரியான ஸீதையைக காணபீாகள இங் கிருநது ஸமுதரததில நூறு யோஜனை தூரம போய தெறகுக கரையைச சோநதால ராவணனைக காணலாம. அதைதபபறறின ஸகல யதனஙகளையும சீகரமாகச செயயுஙகள நான தேவகுலத தில பிறநதவன , நீஙகள ஸீதையைக கண்டு திருமபுவீாகளெனறு என திவயஞானததால நிசசயமாக அறிகிறேன தானயஙகளைத தினனும குலிங்கம புறு முதலிய பக்ஷிகள தூரததிலிருககும பொருள களைப பாாபபதில திறமையுளளவை காககைகளும காய்கனிகளைத தினனும கிளி முதலிய பறவைகளும அதறகு இரண்டு மடங்கு சக்தி வாயநதவை. கரௌஞசம அனறில நீாககாககை முதலிய வைகளுககு மூனறு மடஙகு, பருநதுகளுககு நானகு, கழுகுகளுககு ஐநது, ரூபயௌவன பல வீாயஙகளால விளஙகும அனனஙகளுககு ஆறுமடங்கு, கருடன அருணனெனற வினதையின புதராகளின சகதி இவைகளைக காட்டிலும மிகவும மேலானது நானும ஜடாயு ஸும அருணனுடைய புதராகள ஆகையால ஸகல பக்ஷிகளின சகதியைக் காட்டிலும எஙகளுடையது மேலானது இஙகிருநதே ராவணனையும் ஜானகியையும நான பாாகக முடியும. வினதையின புதரர்களுக்குள்ள திவயஞானமும பலமும எஙகளுககுண்டு என ஸ்வபாவததாலும நான புஜிககும ஆஹார பலததாலும நூறு யோஜ சனைககு அபபாலிருக்கும லஙகையில நடபபவைகளை ஒவவொரு நிமிஷமும பாாககிறேன

வெகு தூரததிலுளள ஜநதுக்களைககொனறு தினபது எங்களு ககு இயறகையாக ஏறபட்ட காாயம காலடியிலிருப்பவைகளையே பாாததுக கோழிகள தினனும. என தமபியை அவன கொனறதற காக அநதத துஷ்ட ராக்ஷஸனை நான கொலவது முறை. ஆனல எனககு வயஸ் அதிகமானதால தேஜஸ குறைநதது பராணவா யுககள தடுமாறுகினறன. இநத ஸமுதரததைத தாணட ஏதாவது உபாயததைக கணடு பிடியுஙகள லஙகைககுப போய ஸீதையைப பாாதது உஙகளுடைய காாயததை முடிததுககொண்டு வாருஙகள. உததம கதியடைநத ஜடாயுஸுககுத தாபபணஞ செய்யவேண்டும. எனனை ஸமுதரததிறகுக கொணடு போயவிடுஙக”ளெனறன.

வானராகள அபபடியே செயது, அங்கிருநது அது முனனிரு நத விடததிற்கு மறுபடியும கொண்டுவநதுவிட்டாாகள. ஸீதை யைப பறறி நிசசயமான ஸமாசாரம தெரிநததால் அவாகளுககுண டான ஆனநததகதிறகு எலலையிலலை.

ஸாக்கம் 59.

ஸம்பாதி ஸீதையின் வரலாற்றைச் சொன்னது

அமிருத தாரையைப போல மதுரமான ஸமபாதியின வாாததைகளைக கேட்டு வானராகள ஸநதோஷததால் மயிாககூசசலடைநதாாகள. அபபொழுது ஜாமபவானும மறற வானராகளும குதிததெழுநது ஸமபாதியைபபாாதது, "ஸீதை எஙகிருககிறள? அவளை எவன பாாததான? யாா அவளை அபஹரிததுககொண்டு போனுன? இதை எங்களுககு விஸதாரமாயச் சொலலவேண்டும. தங்களைவிட வேறு கதி எஙகளுககுணடோ? வஜ்ராயுதஙகளைப போல அதிவேகமாய வநது விழும ராம லகூமணாகளுடைய பாணஙகளின வீாயத்தை அறியாத மூடனயா"ரென்று கேடடாாகள அதைக கேட்டு ஸமபாதி, ஸீதையின விருததாநததைத யறிநது கொளவதில மிகவும ஆவலுளள அநத வானராகளைத தேறறி, மஹா பரீதியுடன அவாகளைப பார்தது,

"ஸீதையை அபஹரிததததை நான கேளவிபபட்ட விததததையும அவளைப் பாாததவனையும அநத விடததையும சொலலுகிறேன கேளுங்கள் நான லஙகையில ஸீதையிருபபதைக காணகிறேனென்று சொன்னதறகு எனனைத தவிர வேறு ஸாகூியுமுணடு நான இநத மலையில ப்ரவேசிகக முடியாத ஓரிடததில இறககையறறு விழுநதேன. வயஸ் சென்றதாலும் பல பராகரமங்கள குறைநததாலும ஸுபாாசவனென்ற என புதரன அநதநதக காலததில எனககு வேணடிய ஆஹாரததைக கொணடுவநது கொடுதது எனனை ரகூிககிறன 'கநதாவாகள் ஸதரீகளிடததில ஆசைவைததவர்க'ளென்ற சருதிபபடி, அவாகளுககுக காமம அதி தீவரம. ஸாபபஙகளுககுக கோபம அதிகம, மிருகஙகளுககுப பயம அதிகம, எஙகளுககுப பசி அதிகம. ஒருநாள என் புதரன எனககு ஆஹாரம தேடபபோய் அஸதமிதத பிறகு ஒன்றும கிடைககாமல வநதான. அதைககண்டு நான பசி தாஹததைத தாஙக முடியாததாலும வயஸ் சென்றதாலும அவனைக கடுமையாயக கோபிததேன. அவனும அதைப பொறுததுககொண்டு, எனனை ஸமாதானஞ்ெசய்து,

'அப்பா! நான் வழக்கப்படி ஆஹாரம் தேடுவதற்காகப் பறந்துபோய் மஹேந்த்ர பர்வதத்தின் த்வாரத்தை மறைத்துக்கொண்டு, ஸமுத்ரத்தில் ஸஞ்சரிக்கும் அநேக ஜந்துக்களையும் கொல்வதற்காக அவைகள் வரும் வழியையும் தடுத்துக்கொண்டு நின்றேன். அப்பொழுது மைமலையைப் போன்ற தேஹத்தையுடைய ஒருவன் பாலஸூர்யனைப்போல காந்திபெற்ற ஓர் ஸ்த்ரீயை எடுத்துக்கொண்டு வருவதைக் கண்டேன். அவர்களைக் கொன்று தங்களிடத்தில் கொண்டுவர வேண்டுமென்று நிச்சயித்து நிற்கையில், அவன் விநயமாயும் மதுரமாயும் என்னை வழி விடும்படி வேண்டினான். நீச குலத்தில் பிறந்த எவனானாலும் அப்படி ப்ரார்த்திப்பவர்களை உபத்ரவிப்பானா? என்னைப் போன்றவன் அந்தப் பாபத்தை நினைக்கவே மாட்டான். பிறகு, அவன் தேஜஸால் நான்கு திக்குகளையும் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு அதி வேகமாய்ச் சென்றான். உடனே ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஸித்த சாரணர் முதலிய கணங்கள் என்னைப் பூஜித்துக் 'குழந்தாய்! இவனும் இவனுடனிருந்த ஸ்த்ரீயும் உன்னிடத்திலிருந்து அபாயமில்லாமல் சென்றது பெரிய கார்யம். நிச்சயமாய் உனக்கு மங்களமுண்டாகு'மென்றார்கள். அவன் ராக்ஷஸேச்வரனான ராவணனென்றும், தசரத புத்ரனான ராமனுடைய பார்யை ஸீதையை அபஹரித்துப் போகிறானென்றும் அவர்களால் அறிந்தேன். அவள் தலைமயிர் அவிழ்ந்து வஸ்த்ரம் நழுவி ஆபரணங்கள் கழன்று ராம லக்ஷ்மணர்களைக் கூப்பிட்டுக்கொண்டே போனாள். 'இப்படிச் சோகத்தால் தபிக்கும் அந்த ஸ்த்ரீயைப் பார்த்துக்கொண்டே நின்றதால் தாமஸமாயிற்' றென்றான்.

"முன்பு நான் ஸாமான்யமாய்ப் பார்த்ததைக் காட்டிலும் இப்பொழுது ஸம்பாசவனால் அந்தப் புருஷன் ராவணனென்றும் அபஹரிக்கப்பட்ட ஸ்த்ரீ ராம பத்னியென்றும் நன்றாயறிந்தும் அந்த ராக்ஷஸனைத் தண்டிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டாகவில்லை. நானோ பக்ஷி, இறகைகளற்றுப் பலஹீனனா யிருக்கும்பொழுது என்ன செய்யமுடியும்? ஆகையால் புத்தியாலும் வார்த்தையாலும் என்னால் கூடியவரையில் உங்களுக்குபகாரம் செய்கிறேன். ராமனுடைய கார்யம் என்னுடையதல்லவா? அதனால் எனக்கும் ப்ரயோஜனமுண்டு. நீங்கள் மஹா புத்திமான்கள், பலசாலிகள், பெருந்தன்மையுடையவர்கள், தேவதைகளும் உங்களைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியாது. ஆகையால் வானரேச்வரன் உங்களை இந்தக் கார்யத்தில் நியமித்திருக்கிறார். ராமலக்ஷ்மணர்க

ருடைய பாணங்கள் கழுகிறகுகளால் அலங்கரிக்கப்பட்டு அதிதீக்ஷ்ணமானவை, மூன்று லோகங்களையும் காப்பாற்றுவதற்கும் நாசஞ் செய்வதற்கும் திறமையுள்ளவை, ராவணன் தேஜஸாலும் பலத்தாலும் விசேஷ ப்ரஸித்திபெற்றவன், ஆனாலும், உங்களுக்கு ராமலக்ஷ்மணர்களுடைய ஸஹாயமிருக்கையில் அஸாத்யமான விஷயம் ஒன்றுண்டோ? நீங்கள் உங்களுடைய கார்யத்தை முடித்து வருவீர்களென்று நிச்சயமாய் எனக்குத் தெரியுமாகையால், தாமஸிக்காமல் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் உங்களைப் போல் புத்திமான்கள் எந்தக் கார்யத்தைச் செய்வதிலும் ஆலஸ்யஞ் செய்யமாட்டார்கள்" என்றான்

ஸர்க்கம் 60.

ஸம்பாதியின் விருத்தாந்தம்.

பிறகு ஸம்பாதி ஜடாயுவிற்குத் தர்ப்பணஞ் செய்து, ஸ்நானம் முதலிய க்ரியைகளை முடித்துக்கொண்டு பர்வதத்தில் வந்து உட்கார்ந்தான் அப்பொழுது வானரர்கள் அவனைச் சூழ்ந்து உட்கார்ந்தார்கள் அவனுக்கு நிசாசர முனி சொல்லியிருந்தபடி ராமதூதர்களான வானரர்கள் வந்ததாலும் தனக்கு இறக்கைகள் மறுபடியும் முளைத்ததாலும் அவருடைய வார்த்தையில் நம்பிக்கை பிறந்து, ஸந்தோஷமடைந்து, வானரர்களைப் பார்த்து, "மித்ரர்களே! ஒருவரும் சப்தம் செய்யாமல் நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள் நான் ஸீதையைப் பார்த்தேனென்ற வார்த்தையை வாஸ்தவமென்று உங்களுக்குப்படும்படி சொல்லுகிறேன். ஸூர்ய கிரணங்களால் தேஹமெங்கும் வெந்து இறக்கையற்று இந்தமலையில் விழுந்தேனென்று சொன்னேனல்லவா? ஆறு தினங்கள் கழித்து ப்ரக்ஞைவந்தது தேஹஸ்வாதீனமில்லாமல் சொல்லமுடியாத உபத்ரவத்தையடைந்து எந்தப் புறத்தில் பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லை. பிறகு ஸமுத்ரம் மலை ஆறுகள் ஓடைகள் வனங்கள் ஸமுத்ரக்கரை முதலியவைகளைப் பார்த்துப் பார்த்து ஞாபகம் வந்தது. தெற்கு ஸமுத்ரக்கரையில் அநேக குகைகளுடனும் பசு பக்ஷிகளுடனும் விளங்கும் விந்த்ய பர்வதம் இதுதானென்று நிச்சயங் கொண்டேன். இங்கே நிசாசரரென்ற மஹா தேஜஸ்வியான ஒரு

மஹாஷி தபஸ செயத ஆசரமம ஒனறுணடு அவா உததம லோகங களை அடைநத பிறகு நான இவவிடததில எணணுயிரம வாஷஙகளாய வஸிததுககொணடிருககிறேன துககம தாஙகாமல இநத மலையின உசசியிலிருநது வெகு கஷடததுடன இறஙகிக கூாமையான தாபபஙகளால நிறைநத பூமியில வநது, அவரைப பாாகக வேணடுமெனறு எணணஙகொணடு, அவருடைய ஆசரமததிறகுச சென றேன நானும ஜடாயுஸும இவவிடததில அவரை அநேகந தடவை தாசிததிருககிறோம. அவருடைய ஆசரமததிறகு ஸமீபத தில காறறு ஸுகமாயும பரிமளமாயும வீசும, விருகூஷஙகள புஷ பஙகளாலும பழஙகளாலும விளஙகும. நான இஙகே வநது அவ ருடைய வரவை எதிாபாாததுககொணடு ஒரு மரததடியில உட்காாந திருநதேன. கொஞச நேரததிறகுப பிறகு அவா ஸமுதரததில ஸநானஞசெயது தேஜஸால ஜவலிததுககொணடு திருமபி வருவ தைக கணடேன கரடி புலி ஸிமஹம யானை ஸாபபம முதலிய ஜந் துககளும தஙகளை வளாபபவனைககணடு ஓடிவருவதுபோல அவரைக் கணடவுடன பரியததுடன பின தொடரும. அரசன ஸபையில உடகாாநதவுடன மநதரிகளும பரிவாரஙகளும வநது கூடுவதுபோல, அவரைககணடவுடன ஸகல ஜநதுககளும ஓடிவநதன. அநத மஹாஷி எனனைபபாாதது ஸநதோஷமடைநது, ஆசரமததில நுழை நது ஒரு முஹூாததம கழிதது வெளியிலவநது,

குழநதாய! உன இறககைகள எரிநதுவிட்டபடியால உனனை அடையாளங கணடுபிடிகக முடியவிலலை. தேஹமெஙகும புண்ணா யிருககிறது, இறககைகள பொசுங்கிப போயின. சரீரம இளைதது பராணனும பல பராக்ரமஙகளும ஒடுஙகிவிட்டன. முனபு இரணடு கழுகுகளை இவவிடததில பாாததிருககிறேன. அவை வேகததில வாயுவைப போனறவை, கழுகுகளுககெலலாம தலைவாகள, இஷ்ட மான ரூபததை எடுககக கூடியவாகள, ஸஹோதராகள். மூததவ ஞன நீயும உன தமபி ஜடாயுஸும மனுஷய ரூபததுடன் எனனை நமஸகரிததுககொண டிருநதீாகளலலவா? ஏதாவது வ்யாதியால பீடிக்கபபட்டாயா? இறககைகளுதிாநத காரணமெனன? அலலது எவனுவ்ஞா இபபடி உனனைத தணடிததானு’ வெனறு கேட்டாா.

ஸர்ககம் 61.

(தொடர்ச்சி)

யௌவனததாலும பலககொழுபபாலும நாஙகள செயத பயங்கரமான காரியததையும ஸூரியனைப பின தொடாநததையும் அவருககுச சொனனேன "ஸ்வாமி! எனககுத தேஹ மெஙகும புண்ணாயிருககினறது, வெடகததால புததி சிதறியிருககினறது, மிகவும களைததிருககிறேன. ஆகையால தருநதபடி தஙகளுககுப பதில சொல்லச சகதியறறவனாயிருககிறேன. நானும என தமபி ஜடாயுஸூம விசேஷ பலசாலிகளென்று காவததால புததிபிசகி, எங்களில யார அதிகமாயப பறககமுடியுமென்று அறிவதற்காகப பநதயம் வைததுககொண்டு பறநதோம. கைலாஸ சிகரததில் வஸிககும முனிகளுககெதிரே, 'ஸூரியோதயம முதல அஸதமனம வரையில் அவருடன் செலவோ'மென்று பரதிகஞை செய்து ஆகாசத்தில கிளமபினோம. அங்கிருநது பாாககையில பூமியிலுள்ள நகரங்கள ரததசகரங்கள போல் காணபபட்டன, சில விடஙகளில வேதகோஷங்களும் சில விடங்களில ஸ்தரீகள சிவபபு வஸ்தரங்களுடன் பாடிக்கொண்டிருபபதும கேட்கபபட்டன. பிறகு அதிவேகமாயப பறநது ஸூரியனுடைய மார்ககததில சென்று கீழே பார்க்கும்பொழுது, பூமியிலுள்ள காடுகள இளம புலலுகளைப போலும உன்னதமான பர்வதஙகள சிறிய கலலுகளைப போலும, மஹா நதிகள் மெல்லிய நூலகளைபபோலும், ஹிமாலயம விநதயம மேரு முதலிய மலைகள மடுவில நீநதும யானைகளைபபோலும காணபபட்டன. இப்படிச சென்றுகொண்டிருககையில ஸூரியன ஆகாசததின மததியில் வநதான். அபபொழுது எஙகளுககு வியாவையும சோகமும பயமும அதிகமாயின. புததிமயஙகிறறு, மனஸூம இநதரியங்களும கலங்கின, பரகஞை தபபிறறு, கிழககு தெறகு மேறகு வடககு ஒன்றுந்தெரியவிலலை. லோகமுழுவதும பரளயகாலததில ஸஙகாஷணாக்கினியால் எரிக்கபபடுவதுபோல காணபபட்டது. அபபொழுது சிதறின என மனஸைக கண்ணில நாட்டி, மஹா ப்ரயாஸையுடன் தைர்யமாய் ஸூரியனை நிமிர்நது பார்ததேன. எங்களுடைய கண்ணிறகு அநத மண்டலம ஜமபூதவீபததைபபோல அவ்வளவு பெரிதாய்த் தோன

ற்றது பிறகு ஜடாயுஸ் மயக்கங் கொண்டு, என்னிடத்தில் சொல்லா மல் திடீரென்று கீழே விழுந்தான். அதைக் கண்டு நான் ஸூர்யனு டைய ஸமீபத்திலிருந்து அதிவேகமாயிறங்கி, என் இறக்கைகளை விரித்து, ஸூர்ய கிரணங்கள் அவன்மேல் தாக்காமல் அவனை மூடினேன். ஆகையால் அவன் எரிக்கப்படவில்லை. நானோ அஜாக்ரதையாய் ஜடாயுஸைக் காப்பாற்றுவதில் புத்தியை நாட்டி, இறகு களை விரித்துக் கொண்டிருந்ததால் அவை எரிந்து அங்கிருந்து விழுந் தேன். அவன் ஜனஸ்தானத்தில் விழுந்திருக்க வேண்டுமென்று ஊஹிக்கிறேன். நான் பரக்களைப்பற்று மூர்ச்சையடைந்து விந்திய பர்வதத்தில் விழுந்தேன். ராஜ்யத்தையும் உடன் பிறந்தவனையும் இறக்கைகளையும் பலத்தையும் ஒரே காலத்தில் இழந்து, இனி இறப் பதே நலமென்றெண்ணி, இந்தப் பர்வத சிகரத்திலிருந்து விழ நிச்ச யித்திருக்கிறே”னென்றேன்.

ஸர்க்கம் 62.

(தொடர்ச்சி.)

இப்படி நடந்த விருத்தாந்தத்தை அந்த மஹர்ஷியிடத்தில் தெரிவித்து, துக்கந் தாங்காமல் அழுதேன். அவர் கொஞ்சநேரம் யோசித்து, “ஸம்பாதே! வருத்தப்படாதே. உன் இறக்கைகளும் நேத்ரங்களும் ப்ராணன்களும் வீர்யமும் பராக்ரமும் முன்போல் ஒப் பற்றதாயிருக்கும். நாரதாதி மஹர்ஷிகள் இனிவரும் ராமவதாரத் தைப் பற்றிச் சொல்லும் ஸமயத்தில் ஏதோ ஒரு பெரிய கார்யம் ஸமீபத்தில் நடக்கப் போகிறதென்று சொல்லக் கேட்டிருக்கிறேன். தபோபலத்தால் அது நிஜமென்றும் கண்டறிந்தேன். இக்ஷ்வாகு வம்சத்தில் தசரதரென்று ஒரு ராஜா பிறப்பார். அவருக்கு மஹா தேஜஸ்வியான ராமனென்று ஒரு புத்ரனுண்டாவான். அவனும் அவனுடைய தம்பி லக்ஷ்மணனும் பிதாவின் ஆக்ஞையால் வனத்தில் ஸஞ்சரிப்பார்கள். அப்பொழுது ராவணனென்ற ஒரு ராக்ஷஸன் ராமனுடைய பத்னியை ஜனஸ்தானத்திலிருந்து பலாத்காரமாயெடுத் துக்கொண்டு போவான். அவன் ராக்ஷஸாதிபதி, தேவர்களாலும் தானவர்களாலும் கொல்லமுடியாதவன்; அவன் பக்ஷ்யங்கள் ஆபர ணங்கள் இன்னும் அவன் அபேக்ஷிக்கக்கூடிய ஸகல பதார்த்தங்களா

னும் ஸீதையை மபகரித்த தன்னிடத்தில் ஆசைகொள்ளும்படி செய்ய யத்னிப்பான் அவளோ மஹா பதிவ்ரதை, பர்த்தாவை விட்டுப் பிரிந்த துக்கத்தால் தபித்துக்கொண்டு, கொஞ்சமாவது இணங்க மாட்டாள் அவள் ஆஹாரமில்லாமலிருப்பதை அறிந்து, தேவேந்திரன் ஓர் பரமான்னத்தைத் தன் ஸேவகனிடத்தில் கொடுத்தனுப்புவான்.

தேவதைகளாலும் அடையக்கூடாத அந்த அமிருதத்திற்கு ஸமமான அன்னத்தை ஸீதை பெற்றுக்கொண்டு அதைக்கொண்டு வந்தவன் இமைகொட்டாததாலும் பூமியைத் தொடாததாலும் ராவணனுடைய ஸேவகனல்ல, இந்திரனுடைய ஸேவகனேயென்று கண்டு கொள்வாள். மேலும், ராமமூர்த்தி இங்கேவந்து அந்தத் துஷ்டனைக் கொன்று தங்களை அழைத்துக்கொண்டு போவார். தேவதைகளுடைய காரியம் ஸித்திக்கும்பொருட்டு தாங்கள் மனுஷ்யாவதாரமெடுத்திருக்கிறபடியால், ஆஹாரத்தால் தேஹத்தில் ப்ராணன்களை நிலை நிறுத்தவேண்டும் தேவதைகளும் மனுஷ்ய ரூபமெடுத்தால் ஆஹாரமில்லாமல் ஜீவிக்க முடியாது இந்தப் பரமான்னம் ஒருவருஷம்வரையில் பசி தாஹம் களைப்பு முதலியவைகளை நீக்குமென்று தேவதூதன் சொல்வதைக் கேட்டு, அதில் ஒரு பாகத்தை "யெடுத்து, 'என் பர்த்தாவும் அவருடைய தம்பியும் உயிரோடிருந்தாலும், அல்லது உயிரிழந்து தைவத் தன்மையை அடைந்திருந்தாலும், இந்த அன்னம் அவர்களுக்குத் திருப்தியை உண்டாக்கக் கடவ'தென்று பூமியில் கொஞ்சம் வைத்துவிட்டு மிகுந்ததைப் புஜிப்பாள்.

பிறகு ராமனால் அனுப்பப்பட்ட வானரர்கள் ஸீதையைத் தேடிக்கொண்டு இங்கே வருவார்கள் அவர்களுக்கு ஸீதையின் விருத்தாந்தத்தை நீ விஸ்தாரமாகச் சொல்லவேண்டியது. நீ இவ்விடத்திலிருந்து ஒரு பொழுதும் போகக்கூடாது. பலஹீனமான ஸ்திதியில் எங்கே போவாய்? கொஞ்சகாலம் பொறுத்திரு மறுபடியும் இறக்கைகள் முளைக்கும் இப்பொழுதே உனக்கு அந்த உபகாரத்தைச் செய்வேன் ஆனால் பக்ஷிகளுக்குள்ள சபல ஸ்வபாவத்தால் நீ இங்கேயிருக்கமாட்டாய் தேவதைகளுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் மஹரிஷிகளுக்கும் தேவேந்திரனுக்கும் ஸகல லோகங்களுக்கும் உன்னால் ஒரு பெரிய காரியம் நிறைவேற வேண்டியிருக்கிறது நீ தேவ யோனியில் பிறந்தவனாகையால் அது உனக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும் அந்த ராஜபுத்ரர்களுக்கும் உபகாரமாயிருக்கும். ஆகையால் ஸீதையிருக்குமிடத்தை ராம

தூதர்களுக்கு நீயே தெரிவிக்கவேண்டியது ராம லக்ஷ்மணர்களைப் பார்க்க வேண்டுமென்று எனக்கும் மிகுந்த ஆவலுண்டு ஆனால் வயஸால் மெலிந்த இந்தச் சரீரத்தை நெடுங்காலம் தரிக்க எனக் கிஷ்டமில்லை ஆகையால் சீக்ரத்தில் உத்தம லோகங்களுக்குச் செல்வேன். நீ இங்கே ஜாக்ரதையாயிருக்கவேண்டும்' என்று, பதார்த்தங்களின் தத்வஸ்வரூபத்தை யறிந்த அந்த மஹர்ஷி என்னைப் பார்த்துச் சொன்னார்" என்றான்.

ஸர்க்கம் 63

வானரர்கள் ஸமுத்ரக்கரை சேர்ந்தது.

இப்படிப்பட்ட அநேக வார்த்தைகளால் அந்த மஹர்ஷி என்னைப் புகழ்ந்து உத்திரவு கொடுத்துத், தன் ஆச்ரமத்திற்குள் ப்ரவேசித்தார். பிறகு நான் அந்தக் குகையிலிருந்து புறப்பட்டு, மெள்ள மெள்ள இந்த மலையின் சிகரத்திலேறி, உங்கள் வரவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன் அந்த மஹர்ஷி என்னிடத்தில் இந்த விஷயத்தைச் சொல்லி எண்ணாயிரம் வர்ஷங்களாகின்றன அவருடைய வார்த்தைகளை மனதில் வைத்துக்கொண்டு தேசகாலத்தை எதிர்பார்த்திருந்தேன். அவர் மஹா ப்ரஸ்தானஞ்செய்து உத்தம லோகத்தை அடைந்தபிறகு, என் திக்கற்ற நிலைமையையும் கஷ்டங்களையும் நினைத்து நினைத்து நீங்காத துயரமடைந்தேன் பலதடவை உயிரைவிட நிச்சயித்தேன். ஆனால் மஹர்ஷியின் வாக்யம் என்னைத் தடுத்தது ஜ்வலிக்கும் அக்னி இருளை அழிப்பதுபோல, அவர் போகும்போது எனக்குச் செய்த உபதேசம் என் துக்கத்தை நீக்கி என்னுயிரைக் காப்பாற்றிற்று ராவணன் என் புத்ரனுக்கு எதிரே யுத்தத்தில் நிற்கமுடியாதென்று எனக்குத் தெரியுமாகையால், நீ அந்த ஸ்த்ரீயை ஏன் அவனிடத்திலிருந்து ரக்ஷிக்கவில்லை? ஹா ராம! ஹா லக்ஷ்மண! வென்று அவள் கூவினதால் ராமனுடைய பத்னி யென்றும் அவர்கள் இவளில்லாமல் வருந்தப்படுகிறார்களென்றும் உனக்குத் தெரிந்திருக்க நீ ஏன் அவளை விட்டாய்? தசரதருக்கும் எனக்குமுள்ள ஸ்நேஹத்திற்கு நீ தகுந்தபடி நடந்துகொள்ளவில்லை' யென்று அவனைக் கண்டித்தேன்" என்றான்.

ஸம்பாதி இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் முன்பு எரிந்துபோன இறக்கைகள் வானரர்களுக்கெதிரே மறுபடியும் முளைத்தன. ஸம்பாதியும் தன் தேஹத்தில் சிவந்த இறகுகள் வளர்வதைக் கண்டு, வானரர்களைப் பார்த்து அளவற்ற ஸந்தோஷத்துடன், "முன்பு ஸூர்ய கிரணங்களால் எரிக்கப்பட்ட என் இறக்கைகள் நிசாசர மஹர்ஷியின் அனுக்ரஹத்தாலும் தபோமஹிமையாலும் மறுபடியும் உண்டாவதைப் பாருங்கள். என் யௌவன தசையில் எனக்குள்ள பலம் பராக்கிரமம் ஆண்மை இப்பொழுது வந்திருக்கின்றன. ஆகையால் ஸகல ப்ரயத்தனங்களையும் குறைவில்லாமல் செய்யுங்கள். ஸீதையைக் கண்டுபிடிப்பீர்கள். எனக்கு இறகுகள் மறுபடியும் முளைத்ததைக்கொண்டு உங்களுடைய கார்யமும் ஸித்திக்குமென்பது நிச்சய"மென்று அந்தப் பக்ஷிராஜன் தனக்குப் புதிதாயுண்டான சக்தியைப் பரீக்ஷிப்பதற்கு அந்த மலைச் சிகரத்திலிருந்து பறந்துபோனான்.

அவனுடைய வார்த்தைகளால் அந்த வானரச்ரேஷ்டர்களுக்கு ஸந்தோஷம் மேலிட்டு, ஸீதையைத் தேடுவதில் விசேஷ ஆவலுண்டாயிற்று. ஸ்வபாவமாகவே வாயுவிற்கு ஸமமான பராக்ரமசாலிகள், ஸம்பாதி சொன்ன வார்த்தைகளால் அவர்களுடைய ஆண்மை அதிகரித்தது. பிறகு அபிஜித்தென்ற முஹூர்த்தத்தில் ஸீதையைத் தேடுவதற்காகப் புறப்பட்டு ஸமுத்ரக் கரைக்குச் சென்றார்கள்.

ஸர்க்கம் 64

அங்கதன் வானரர்களைப் பரீக்ஷித்தது.

ஸம்பாதியின் வார்த்தைகளைக் கேட்டு வானரர்கள் ஸந்தோஷத்தால் குதித்து ஆரவாரித்தார்கள். பிறகு ஸீதையைப் பார்க்க ஆசைகொண்டவர்களாய் ராவணனுக்கிருப்பிடமான லங்கையிருக்கும் ஸமுத்திரக் கரைக்கு வந்தார்கள். அது லோகத்திலுள்ள ஸகல உத்தம பதார்த்தங்களும் நிறைந்து விளங்குகிறது. தெற்கு ஸமுத்ரத்தின் வடக்குக் கரையில் வானர ஸைன்யங்கள் இறங்கி, அநேக கோரமான ஜல ஜந்துக்கள் பருத்த ரூபங்கொண்டு பெருங் கூச்சலிட்டு விளையாடுவதையும், சிலவிடங்களில் அலைகள் இடிபோல

மோதுவதையும், சில விடங்களில் அலைகளேயில்லாமல் ஸமுத்ர ராஜன் தூங்குவதுபோலிருப்பதையும், சில விடத்தில் அலைகள் மஹாபர்வதங்களைப் போலிருப்பதையும், சில விடத்தில் சிறிய அலைகளால் ஸமுத்ரம் விளையாடுவதுபோல் காணப்படுவதையும், பாதாள லோகவாஸிகளான தானவர்களுக்கு விளையாடுமிடமாய் விளங்கும் மஹா ஸமுத்ரத்தைக் கண்டு வானரர்களுக்குப் பயம் மேலிட்டு மயிர்க் கூச்ச லெடுத்தது. ஆகாசத்தைப் போல் தாண்டுவதற்கு அஸாத்யமாயிருப்பதைப் பார்த்து வானரர்கள், "நாம் இதை எப்படிக் கடந்து செல்வோ"மென்று கவலை கொண்டார்கள். அதை அறிந்து மஹாபுத்திமானான அங்கதன் சாதுர்யமான வார்த்தைகளால் அவர்களுடைய பயத்தைப் போக்கித் தைர்யப்படுத்தினான்.

"மனதில் கவலை கொள்ளும்படி எப்பொழுதும் விடக்கூடாது. கவலை கொள்வதால் அநேக தோஷங்களுண்டு. மஹாஸர்ப்பத்தை ஒரு அறியாக் குழந்தை கோபமூட்டினால் எப்படி அது அவனைக் கடித்துக் கொல்லுமோ, அப்படிக் கவலையும் சீக்ரத்தில் மனுஷ்யனை நாசஞ் செய்யும். நாம் ஒரு கார்யத்தை உத்ஸாஹத்துடன் ஆரம்பித்துச் செய்யும்பொழுது கவலைக் கிடங்கொடுத்தால், அது நம்மை மேற்கொண்டு நமது ப்ரயத்னங்களை நாசஞ் செய்யும். கவலையால் நமது தேஜஸ் அடங்கினால் எந்தக் கார்யந்தான் கைகூடு"மென்று வானரர்களை ஸமாதானஞ் செய்தான்.

மறுநாட் காலையில் அங்கதன், வயஸாலும் ஞானத்தாலும் அநுபவத்தாலும் ப்ரஸித்திபெற்ற வானர ச்ரேஷ்டர்களை ஸபை கூட்டி மறுபடியும் ஆலோசித்தான். மருத்துக்களுடைய கணங்கள் இந்த்ரனைச் சூழ்ந்திருப்பதுபோல், அந்த வானர ஸைன்யம் அங்கதனைச் சூழ்ந்து விளங்கிற்று. வாலி புத்ரனான அங்கதனையும் ஆஞ்ஜநேயரையும் தவிர மற்ற யார் அந்த வானர ஸைன்யத்தை அடக்கமுடியும்? அப்பொழுது அங்கதன் அவர்களை உபசரித்து, "எந்த மஹா தேஜஸ்வி ஸமுத்ரத்தைத் தாண்டுவான்? மஹாவீரனான ஸுக்ரீவனுடைய வார்த்தையை எவன் ஸத்யமாகச் செய்வான்? நூறு யோஜனை தூரமுள்ள இந்த ஸமுத்ரத்தைத் தாண்டி நம்மெல்லோரையும் மஹாராஜாவின் தண்டனைக்குட்படாமல் எவன் செய்வான்? நமது கார்யத்தை நிறைவேற்றி, இங்கிருந்து கிஷ்கிந்தைக்குச் சென்று, பெண்டு பிள்ளைகள் தனதான்யங்கள் க்ருஹங்களை மறுபடியும் பார்த்து ஸுகமாய் நாம் வஸிக்கும்படி செய்யக்கூடிய மஹானுபாவன் யாரோ? எவனுடைய க்ருபை

யால நாம மஹா பலசாலிகளான ராமலக்ஷ்மணாகளேயும ஸுக்ரீவனே யும ஸந்தோஷமாயப பாாபபோம் உஙகளில இநத ஸமுதரத தைதத தாணடககூடியவன எவனுவதிருநதாலஅவன நமமெலலோாக கும இபபொழுதே அபயதானஞ செயது ஸகல க்ஷேமததையும அனுகரஹிககடடு'' மெனறு தெரிவிததான அதைககேடடு அங கிருநத எவனும பதில சொலலவிலலே. அநத வானர ஸைனயம முழுவதும சபதமறறிருநதது. அபபொழுது அஙகதன மறுபடியும அநத வானராகளே நோககி "நீஙகளெலலோரும, பலசாலிகளுககுள் சிறநதவாகளெனறும, கலங்காத பராகரமமுடையவாகளெனறும், உததம குலததில பிறநதவாகளெனறும மஹாராஜாஉஙகளே விசேஷ மாயாதை செயதிருககிறுா உஙகளில எவனுவது எபபொழு தாவது எங்கேயாவது போகத தடைபபடடதெனறு கிடையா தாகையால ஒவவொருவரும இவவளவு தூரம தாணடககூடுமெனறு சொலலுஙக''ளெனறு ஆகஞாபிததான

ஸாக்கம 65.

வானரர்களின் சக்தி.

அதைககேட்டு வானராகள வெகு உதஸாஹததுடன் தஙகள திறமையைச சொலலிக கொணடாாகள கஜன 'பதது யோஜனை தாணடுவே'னெனறுன் கவாக்ஷன 'இருபது யோஜனை தாணடுவே' னென்றுன. கவயன, 'முபபது யோஜனை தாணடுவே' னெனறும, சரபன, 'நாறபது யோஜனை' யெனறும, கநதமாதனன், 'ஸநதேஹ மினறி ஐமபதுயோஜனை' யெனறும, மைநதன 'அறுபது யோஜனை' யெனறும், த்விவிதன 'எழுபதுயோஜனை' யெனறும, ஸுஷே ணன 'எண்பது யோஜனை' யென்றும சொனனுாகள. அபபொ ழுது மிகவும வயஸ் சென்ற ஜாமபவான எலலோரையும் வணங்கி "முன்பு எனககும எதோ கொஞசம சகதி யிருந ததது. ஆனுல இபபொழுது மிகவும கிழவனுனேன எபபடியிருந தாலும ரகுநாதனும ஸுக்ரீவனும ஏறபடுததிய காாயமோ மஹா சலாகயமானது மேலும அதை முடிககும விஷயததில நாம ஒவ வொருவரும வஞசனையினறி கூடியவரையில உதவி செயயவேண் டும. காலகதியால என பலமும சகதியும மிகவும குறைநதிருககின்

றன் ஆகையால் இப்பொழுது தொண்ணூறு யோஜனை தாண்டு வேனென்பதில் ஸந்தேஹமேயில்லை ஆனால் என் வீர்யம் எப்பொழுதும் இப்படி யிருந்ததென்று நினைக்கவேண்டாம் மஹாபலி சக்ரவர்த்தி செய்த யாகத்தில் பகவான் திருவிக்ரமாவதாரமெடுத்து லோகங்களை மூன்றடிகளால் அளந்தார் அப்பொழுது நான் அவரை ப்ரதக்ஷிணஞ் செய்திருக்கிறேன் ப்ரஹ்மாண்டத்தை ஒரு தடவை சுற்றி வந்ததற்கு ஸமம் இப்பொழுதோ எனக்கு வயஸாகிவிட்டது, தாண்டுவதில் சக்தி குறைந்திருக்கிறது என் யௌவன தசையில் என்னைப்போன்ற பலவான்கள் வேறொருவருமில்லை ஆனால் இப்பொழுது எனக்குள்ள சக்தியால் இந்தக் காரியத்தை முடிப்பேனென்று தோன்றவில்லை" யென்றார்

அப்பொழுது அங்கதன் மஹா புத்திமானான ஜாம்பவானை உபசரித்து, "இந்த நூறு யோஜனையையும் நான் அலக்ஷ்யமாகத் தாண்டுவேன் ஆனால் திரும்பிவர முடியுமோ முடியாதோ வென்று எனக்குத் தெரியா" தென்றான்

ஜாம்பவான், "வானர சரேஷ்ட! உன் சக்தி அபாரமென்று எங்களுக்குத் தெரிந்த விஷயமே நூறு, ஆயிரம், பதினாயிரம் யோஜனையென்று உன் சக்திக்கு எல்லையில்லை. நீ நினைத்த விடத்திற்குப் போய்த் திரும்பிவரமுடியும் ஆனால் எங்களெல்லோரையும் காரியங்களில் ஏவும் உன்னை நாங்கள் ஒரு காரியத்தில் ஏவுவது ந்யாயமல்ல நாங்களெல்லோரும் பர்த்தா, நீயோ பார்யை. எங்களுடைய ப்ராணன்களும் புத்தியும் பலமுமுள்ளவரையில் உன்னைக் காப்பாற்றவேண்டும். குடும்பகாரியங்களில் பார்யை பர்த்தாவைக் கட்டளையிடவேண்டும். அதைப் பற்றின அதிகாரம் யாவும் அவளுக்கே ஸேனைத் தலைவன் பத்னியைப்போன்றவன். அவனே கதி. இந்தக் காரியத்திற்கு நீயே மூலம் நமது காரியத்தின் மூலத்தை ஜாக்ரதையாகக் காப்பாற்றவேண்டுமென்று நீதிசாஸ்த்ர நிபுணர்கள் சொல்லுகிறார்கள். வேர் செழித்திருந்தால் குணங்களென்ற புஷ்பங்களும் பழங்களும் ஸுலபமாகக் கிடைக்கும். புத்தியாலும் பராக்ரமத்தாலும் இந்தக் காரியத்தை முடிப்பதற்கு நீ காரணமாயிருக்கிறாய், எங்களுக்கு யுவராஜா, மஹாராஜாவின் புத்திரன்; உன் ஆதரவால் நாங்கள் இந்தக் காரியத்தை முடிக்கக்கூடு"மென்று சொன்னார்.

அங்கதன் "நானும் போகாமல் மற்ற வானரர்களும் போக முடியாமலிருந்தால் நாம் மறுபடியும் ப்ராயோபவேசஞ்செய்து உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை. மஹாராஜாவின் உத்திரவை நிறைவேற்றாமல் அவரிடத்திற்குப் போனால் உயிர்தப்ப மாட்டோம். அவர் நமக்குப் பஹுமானம் செய்வதற்கும் தண்டிப்பதற்கும் ப்ரபு. அவருடைய கட்டளையை மீறி அங்கே போனால் கொல்லப்படுவோம். லங்கைக்குப் போனாலும் திரும்பிவரமுடியாததால் என்ன ப்ரயோஜனம்? தாங்களோ மஹாபுத்திமான், வயஸாலும் ஞானத்தாலும் எல்லா விஷயங்களின் உண்மையை ப்ரத்யக்ஷமாக அறிந்திருப்பதாலும் எங்களெல்லோரிலும் ச்ரேஷ்டர். ஆகையால் இந்த ஸமுத்ரத்தைத் தாண்டி எப்படியாவது நமது கார்யத்தை முடிப்பதற்குத் தாங்களே உபாயம் தேடவேண்டு"மென்று ப்ரார்த்தித்தான்.

அப்பொழுது ஜாம்பவான் "ராஜபுத்ர! இந்தக் கார்யத்திற்குக் குறைவு ஏதும் நேராது. இதை முடிக்கக்கூடியவனைக் கண்டுபிடித்து ஏவுகிறேன் பாருங்க"ளென்று, ஸுகமாகத் தனியே உட்கார்ந்திருக்கும் ஆஞ்ஜநேயரை அந்தக் கார்யத்தில் ஏவ நிச்சயித்தார்.

ஸர்க்கம் 66

ஜாம்பவான் ஆஞ்ஜநேயரைப் புகழ்ந்தது

எண்ணிறந்த வானரர்கள் வருந்துவதைப் பார்த்து ஜாம்பவான் ஆஞ்ஜநேயரை நோக்கி "வானரர்களுக்குள் வீரசிகாமணியே! ஸகல சாஸ்த்ரங்களிலும் நிபுணனே! தனியே போய் உட்கார்ந்துகொண்டு மௌனமாயிருப்பதேன்? தேஜஸிலும் பலத்திலும் ஸுக்ரீவ மஹாராஜாவிற்கும் ராமலக்ஷ்மணர்களுக்கும் நீ ஈடல்லவா? காச்யப ப்ரஜாபதியின் புத்ரனான கருடன் எல்லா பக்ஷிகளிலும் மஹாபலவானென்றும் ச்ரேஷ்டனென்றும் பெயர்பெற்றவன். அவன் ஆஹாரத்திற்காக ஸமுத்ரத்திலிருந்து மஹாஸர்ப்பங்களை அதிவேகமாகக் கொத்திக்கொண்டுபோவதைப் பலதடவை பார்த்திருக்கிறேன். அவனுடைய இறக்கைகளின் பலமும் உன் புஜபலமும் ஸரி. பராக்ரமத்திலும் வேகத்திலும் அவனுக்குக் குறைந்தவனல்ல. பலம் புத்தி தேஜஸ் வலிமை முதலிய குணங்களில் ஸகல

பூதங்களிலும் நீ மேலானவனென்று உனக்கேன் தெரியவில்லை? இந்த ஸமுத்ரத்தைத் தாண்டத் தகுந்தவன் நீயேயல்லவா?

கேஸரியென்ற வானரசரேஷ்டனுக்கு அஞ்ஜனையென்ற பத்னியுண்டு அப்ஸரஸ்களுக்குள் உத்தமமான புஞ்ஜிகஸ்தலையென்பவள் அவளே மூன்று லோகங்களிலும் அவளைப் போன்ற ரூபவதி கிடையாது ரிஷிசாபத்தால் குஞ்சரனென்ற வானரனுக்குப் புத்ரியாய்ப் பிறந்து தைவத்தன்மையால் நினைத்த ரூபத்தை எடுக்கக் கூடியவளாயிருக்கிறாள் ஒருநாள் அவள் ஸகல ப்ராணிகளையும் மயக்கும்படியான மனுஷ்ய ரூபத்துடன் விசித்ர வஸ்த்ராபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பர்வத சிகரத்தில் உலாவிக்கொண்டிருந்தாள் அப்பொழுது வாயு பகவான் அவள்மேல் ஆசைகொண்டு அவள் தரித்த வெண்பட்டை அபஹரித்தான் மன்மதனுடைய தோரண ஸ்தம்பங்கள்போல் திரண்டுருண்ட துடைகளையும் மலர்ந்த தாமரையைப் பழிக்கும் முகத்தையும், அழகிய ஸ்தனங்களையும் பருத்த பின்தட்டையும், ஸூக்ஷ்மமான இடையையும் ஆழ்ந்த நாபியையும் மற்ற குற்றமற்ற அவயவங்களையும் கண்டு, காமம் மீறி, வாயு இரு கைகளாலும் அவளை இறுகத் தழுவித், தன் தைவத்தன்மையால் அவளுடன் தேஹ ஸம்பந்தமில்லாமலேயே தன் தேஜஸை அவளுடைய கர்ப்பத்தில் ப்ரவேசிக்கச் செய்தார் அந்த மஹாபதிவ்ரதை பயந்து நடுங்கி, "பதிவ்ரதையான என்னைக் கெடுக்க விரும்பின துஷ்டனார்?" என்று கோபத்துடன் கேட்டாள் அதற்கு வாயுபகவான் "பெண்ணே! பயப்படாதே. நான் உன்னைக் கெடுக்க விரும்பினவனல்ல உன்னை ஆலிங்கனஞ்செய்து மனஸால் அநுபவித்தபடியால் உனக்குப் பிறக்கும் புத்ரன் வீர்யத்திலும் புத்தியிலும் சிறந்தவனும் மஹாபலவானும் அபார தேஜஸ்வியாயும் ஒப்பில்லாத வலிமையுடையவனும் தாண்டுவதிலும் தடையில்லாமல் செல்வதிலும் எனக்கு ஸமமாயுமிருப்பான்" என்றார். தேவசரேஷ்டனுடைய அநுக்ரஹத்தைப் பெற்றதைப்பற்றி உன் தாய் பரமானந்தமடைந்து, மந்தர பர்வதத்தின் குகையில் உன்னைப் பெற்றாள்.

அப்பொழுது ஸூர்யோதயமாயிற்று. நீ குழந்தையானதால் சிவந்த ஸூர்ய மண்டலத்தைப் பழமென்றெண்ணிப் பிடிக்க விரும்பி ஆகாசத்தில் தாவிச் சென்றாய். அநேகமாயிரம் யோஜனை தூரம் அதிவேகமாகத் தாவிப் போயும் சளைக்காமல், ஸூர்ய தேஜஸால் எரிக்கப்பட்டும் வருந்தாமல் விருப்பதைப் பார்த்து

இநதரன பயநது வஜ்ராயுதததை உனமேல கோபததுடன எறிந தான உடனே நீ அஙகிருநது விழுநதாய உன கனனம ஒரு மலைச சிகரததிலடிபபடடு முறிநதது, அதனால உனககு ஹனுமா னெனற பெய கிடைததது வாயுபகவான தன அருமைககுழநதை யான உனககு நேரநத ஆபததைப பாரதது, ஸகல பராணிகளிடததி லும கோபஙகொணடு தன போககை அடககி ஒரிடததிலும வீசாம லிருநதான அபபொழுது ஸகல ஜீவனகளும மூசசுவிட முடியாமல தபிததாாகள தேவதைகள பயநது வாயுவை பராாததிகக, அவா கோபநதணிநது அவாகளிடததில கிருபைவைதது, முனபோல லோகஙகளில ஸஞசரிததாா. அபபொழுது உனககு ஆயுதஙகளால அழிவிலலை யெனறு பரஹமா அனுகரஹிததாா இநதரன, நீ வஜராயுதததால அடிபபடடும இறககாததைக கணடு மகிழநது 'உனககிஷடமானபொழுது நீ மரணமடையககடவாயெனறு வரங கொடுததான

ஆகையால நீ கேஸரியெனற வானரனுடைய க்ஷேததரததில வாயுபகவானுககுப பிறநத புதரன தேஜஸஸிலும பராககரமதததி லும தாண்டுவதிலும அவரைப போனறவன. நாங்கள இப்பொ ழுது உயிரில ஆசையை விடடிருககிறோம நீ எஙகளைக காபபாறற வேணடும திறமையிலும பராக்ரமததிலும நீ கருடனைபபோனறவ னலலவா? பகவான திரிவிகரமாவதார மெடுதத பொழுது நான இந தப பூமண்டலததை இருபததொரு தரம சுறறிவநதேன பாற கடலைக கடையுமபொழுது தேவதைகளின உததிரவால அநேக லோகங்களிலிருநது அபூாவமான ஒஷதிகளைக கொண்டுவநதேன. அவைகளை ஸமுதரததில போடடதால அமிருத முணடாயிறறு அபபொழுது என பலம எலலையறறது இபபொழுதோ நான கிழ வன. பலபராககரமமறறவன. நீ ஸகல உததம குணங்களால அலஙகரிககபபடடவன, எஙகளில மேலானவன ஆகையால அள வறற உன பல பராககரமததை வெளிபபடுததது உன அதபுதமான வீாயததைப பாாககக இநத வானர ஸைனயம ஆவலகொணடிருககி றது எழுநதிரு இநத மஹாஸமுதரததை ஒரு நிமிஷததில தாண்டி வா. வேகமாகத தடையிலலாமல ஸஞசரிககககூடியவன. ஸகல பராணிகளிலும உனனைபபோலுணடோ? வானராகள ஏககம பிடிததிருககிறாாகள ஆஞஜநேய! இநத ஸமயததிலும அலக்ஷியஞ செயயலாமா? ஸகல லோகஙகளையும மூனறு அடிகளால முன்பு மஹாவிஷ்ணு தாண்டினதுபோல, நீயும இநத மஹாஸமுதரததை

ஓரடியால் தாண்டுவார்" என்று ஜாம்பவான் மாருதியை ஸ்தோத்திரஞ் செய்தார்.

அதைக் கேட்டு ஹனுமாரும் "அப்படியே செய்கிறேன்" என்று ஒப்புக்கொண்டு அதற்குத் தகுந்த பெரிய ரூபத்தை எடுத்தார். வானர ஸைன்யங்கள் கவலை நீங்கி ஆனந்தத்தால் பரவசமானார்கள்.

ஸர்க்கம் 67

ஆஞ்ஜநேயர் மஹேந்த்ர பர்வதத்திலேறினது.

இப்படி நூறு யோஜனையுள்ள ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்குத் தன் தேஹத்தை வளர விருத்திசெய்துகொண்டு, வீர்யத்தால் ஜ்வலிக்கும் மாருதியைக் கண்டு, வானரர்களெல்லோரும் ஸகல துக்கத்தையும் மறந்து ஸந்தோஷமாகக் கூச்சலிட்டுக் கொண்டாடினார்கள். முன்காலத்தில் பகவான் நாராயணன் த்ரிவிக்ரமாவதாரமெடுத்தபொழுது ஸகல ப்ராணிகளும் பார்த்ததுபோல, வானரர்கள் ஆச்சர்யத்துடனும் ஸந்தோஷத்துடனும் ஆஞ்ஜநேயரை நான்கு புறங்களிலிருந்தும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களால் கொண்டாடப்பட்டு, வளர வளர்ந்தார், வாலைப் பூமியில் சுழற்றி அடித்து, பலமும் தேஜஸ்ஸும் ஒவ்வொரு நிமிஷத்திலும் அதிகரிக்க, அவருடைய ரூபம், வயஸ்சென்ற அந்த வானரச்ரேஷ்டர்கள் புகழப்புகழ, கண்கொண்டு பார்க்கமுடியாமலிருந்தது. மலைக் குகையில் ஸிம்ஹம் வளர்வது போல வாயுபுத்திரன் நிமிஷத்துக்கு நிமிஷம் பருத்தார். அப்பொழுது அந்தப் புத்திமானுடைய முகம் பழுக்கப் பழுக்கக் காய்ச்சின மடக்கையைப் போலவும், அவர் புகையற்றுக் கொழுந்துவிட்டெரியும் அக்னியைப்போலவும் தோன்றிற்று.

வானரர்களுக்கு நடுவிலிருந்து ஸந்தோஷத்தால் மயிர்க்கூச்சலுடன் எழுந்து ஹனுமான், வானர முதியோர்களை வணங்கி "அக்னியின் பரமமித்ரனான வாயுபகவான் மஹாபலசாலி, அளவிடக்கூடாத பராக்ரமமுடையவர், வேகமாக அடிக்கும்பொழுது மலைச்சிகரங்களைப் பெயர்த்தெறிவார். கருடனுடைய வேகமும் அவருடைய வேகத்திற்கு ஈடல்ல. நான் அவருக்குப் பிறந்தவன். தாண்டுவ

திலும் ஆகாசத்தில் போவதிலும் எனக்கு நிகரில்லை. ஆகாசத்தை யளாவி நிற்கும் மேருமலையை இங்கிருந்து கிளம்பி, பூமியில் தொடாமல் அநேக ஆயிரம் தடவை சுற்றி வருவேன். மஹாஸமுத்ரங்களைப் புஜங்களால் கலக்கி, இந்த லோகங்களை முழுகச்செய்வேன். என் துடைகளின் வேகத்தால் உண்டான காற்று ஸமுத்ரஜலத்தைக் கிளப்பி, அதிலுள்ள ஜந்துக்களைக் கரையில் வாரியடிக்கும். ஸமுத்ரத்திலிருக்கும் மஹா ஸர்ப்பங்களை ஆஹாரத்திற்காகப் பிடிக்கப் பூர்ண பல பராக்ரமத்துடன் அதிக வேகமாகப் பறந்துவரும் கருடனை நிற்காமல் அநேக ஆயிரம் தடவை சுற்றிவர முடியும். அவனுக்கும் ப்ராணனைக் கொடுக்கும் வாயுவின் புத்திரனல்லவா நான்? எனக்கு இந்தத் திறமை இயற்கையாக உள்ளது. ஸூர்யனுடன் உதயகிரியிலிருந்து புறப்பட்டு அவருக்கு முன்பு அஸ்தகிரிக்குப் போய், நடுப்பகலில் திரும்பிவந்து அவரைக் காண்பேன். பிறகு அங்கிருந்து பூமியைத் தொடாமலேயே முன்னிருந்த வேகம் குறையாமல் மறுபடியும் ஒருதடவை அவரை ஸந்திப்பேன். ஆகாசத்திலுள்ள க்ரஹங்கள் நக்ஷத்திரங்கள் முதலியவைகளை வேகத்தால் ஜயிப்பேன், ஸமுத்ரத்தை வற்றச்செய்வேன், பூமியைப் பிளப்பேன். நான் தாண்டும்பொழுது மலைகள் பொடியாகும். என் துடைகளின் வேகத்தால் ஸமுத்ரத்தை எழும்படிசெய்வேன். ஆகாசத்தில் போகையில் பல மரங்களும் கொடிகளும் புஷ்பங்களும் என்னைத் தொடரும். ஆகாசத்தில் ஸ்வாதிநக்ஷத்ரத்தின் வழியைப்போல நான் போகும் வழி ப்ரகாசிக்கும். நான் இங்கிருந்து கிளம்பி அக்கரையில் குதிக்கும்பொழுது, ஸகல பூதங்களும் என்னைக் கண்டு மகிழும். ஆகாசத்தை மறைத்துக்கொண்டு போகும் பெரிய மேகத்தைப் போல நான் ஆகாசமார்க்கமாகச் செல்லும்பொழுது, வேகத்தால் ஆகாசத்தை விழுங்கிக்கொண்டு போவதுபோலிருப்பதைக் காண்பீர்கள். மேகங்களைச் சிதறவடிப்பேன், மலைகளை நடுங்கச்செய்வேன், ஸமுத்ரத்தைக் கலக்குவேன். இந்தச் சக்தி எனக்கும் கருடனுக்கும் வாயுபகவானுக்கும் மாத்ரமுண்டு. அவ்விருவர்களைத் தவிர என்னைத் தொடரக் கூடியவர்களில்லை. மேகத்திலிருந்து பாயும் மின்னலைப்போல யாதொரு பற்றுமில்லாமல் ஆகாசத்தில் கிளம்பி ஒரு நிமிஷத்திற்குள் அக்கரைக்குப் போவேன். நான் ஸமுத்ரத்தைத் தாண்டும்போது த்ரிவிக்ரமாவதாரமெடுத்த மஹாவிஷ்ணுவைப்போல விளங்குவேன். ஸாதுக்களுக்கு ஸந்தேஹம் நேரும்பொழுது அவர்களுடைய அந்தக்கரணத்தில் அகஸ்மாத்தாய்த் தோன்றும் எண்ணங்களே ப்ரமாணம். அதுபோல ஸீதையைப் பார்ப்

பேனென்று நிச்சயமாய் எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் நீங்கள் கவலையற்று ஸந்தோஷிக்கலாம். வேகத்தில் வாயுபகவானுக்கும் கருடனுக்கும் நான் ஸமமானவன். அநேக ஆயிரம் யோஜனை தூரம் சரமமில்லாமல் அலக்ஷியமாய்ச் செல்வேனென்று எனக்குத் தோன்றுகிறது. வஜ்ராயுதத்தைத் தரிக்கும் தேவேந்த்ரனால் காக்கப்பட்ட தேவதைகளின் அமிருதத்தையும், ப்ரஹ்மாவால் காக்கப்பட்ட யோகிகளுடைய அமிருதத்தையும் அவர்களை ஜயித்து ஒரு க்ஷணத்தில் கொண்டுவருவேன். வேண்டுமென்றால் லங்கையைப் பெயர்த்து இங்கே எறிவே"னென்று இப்படிக் காஜிக்கும் அந்த வானரச்ரேஷ்டனைப் பார்த்து, மற்ற வானரர்கள் அளவற்ற ஆனந்தங்கொண்டு, அவருடைய அபார தேஜஸைக் கண்டு திகைத்து நின்றார்கள்.

வானர ஸைன்யங்களின் துக்கத்தைப் போக்கும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, ஜாம்பவான் அடங்காமகிழ்ச்சிகொண்டு, "மஹா வீரனான கேஸரியின் புத்ர! ஹனுமானே! வாயுபகவானுக்குப் பிறந்தவனே! உன் மித்ரர்களுடைய ஹிருதயத்தை இருள்போல் மூடிக்கொண்டிருந்த துக்கமானது உன் வார்த்தைகளாகிற சந்த்ர கிரணங்களால் நாசமடைந்தது. உன் க்ஷேமத்தையே ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கும் நாங்களெல்லோரும் நீ போகும் காரியம் ஸித்திக்கும் பொருட்டு மங்களக்ரியைகளை வெகுஜாக்ரதையாகச் செய்து கொண்டிருப்போம். மஹார்ஷிகளின் அருளாலும் பெரியோர்களின் கிருபையாலும் வானர மூத்தோர்களின் ஸம்மதியாலும் ஸமுத்ரத்தைத் தாண்டி வா. எங்கள் ப்ராணன்களெல்லாம் உன்னிடத்திலேயே நாடியிருக்கின்றன. ஆகையால் நீ வருமவரையில் ஒற்றைக் காலால் நின்றுகொண்டிருப்போ"மென்றார்.

அப்பொழுது மாருதி "நான் இங்கிருந்து கிளம்பும்பொழுது என் வேகத்தை இந்தப் பூமி தாங்காது. இந்த மஹேந்த்ர பர்வதத்தின் சிகரங்கள் விஸ்தாரமாகவும் உறுதியாகவுமிருக்கின்றன. பல வகைத் தாதுகள் நிறைந்தும் பல மரங்களால் செழித்தும் விளங்கும் இந்த மலையில் ஏறி நின்று, நூறு யோஜனை தூரம் தாண்டுவதற்கு வேண்டிய வேகத்தைச் சோதித்துக் கொள்ளுகிறேன். நான் உதைத்துக் கிளம்பும் வேகத்தை இந்த மலைச் சிகரங்கள் நன்றாகத் தாங்கு"மென்றார்.

வானரர்கள் அனைவரும் அதற்கு ஸம்மதிக்க, ஆஞ்ஜநேயர் அவர்களால் சூழப்பட்டு மஹேந்த்ர மலையிலேறினார். பல பல அபூர்வ

விருக்ஷங்கள் அதில் நிறைந்திருந்தன. மான்களுக்குப் பிரியமான பல புல் தரைகள் நவரத்தினங்கள் இழைத்ததுபோல் அங்கே பிரகாசித்தன. அங்குள்ள மரங்கள் எக்காலத்திலும் புஷ்பங்களாலும் பழங்களாலும் கண்ணைப் பறித்தன. ஸிம்ஹம் புலி மதயானை பக்ஷிகள் முதலிய பல ஜந்துக்களின் ஓசையாலும் நீர்த் தாரைகளாலும் கேட்பதற்கு மதுரமாகவிருந்தது. அதன் சிகரங்கள் ஆகாசத்தை எட்டின. மஹேந்திரனுக்கு ஸமமான பலத்தையுடைய ஹனுமான் அந்த மஹேந்த்ரகிரியில் சற்று நேரம் நடமாடினார். அந்த மஹா பலவானுடைய பாதங்களால் அழுத்தப்பட்ட அந்த மலை ஸிம்ஹத்தால் அடிக்கப்பட்ட மதயானையைப்போல் விளங்கிற்று. மலையருவிகள் பெருகி ஓடின, சிகரங்கள் தூளாயின, யானை புலி ஸிம்ஹம் முதலிய மிருகங்கள் பயந்து நடுங்கின, மஹா விருக்ஷங்கள் சாய்ந்தன, மதுபானத்தில் மிகுந்த பிரியமுள்ள நாக கந்தர்வ வித்யாதர கணங்களும் பக்ஷிகளும் அந்த மலையிலிருந்து கிளம்பி, ஆகாசத்தில் போக ஆரம்பித்தன. அங்குள்ள மஹா ஸர்ப்பங்கள் பயந்து ஒளிந்தன, சிகரங்கள் அசைந்தன. புற்றிலிருந்து சீறிக்கொண்டு பாதி வெளியில் வந்த ஸர்ப்பங்கள் அப்படியே நசுங்கித் தொங்கினபடியால் அந்த மலையெங்கும் சிறுகொடிகள் கட்டித் தொங்கவிட்டதுபோல் காணப்பட்டது. அங்குள்ள மஹர்ஷிகளும் பயத்தால் அதை விட்டுப் போனபடியால், வழி நடப்பவர்களைக் கூட வந்தவர்கள் நடுக்காட்டில் விட்டுப் போவதுபோலிருந்தது. ஆஞ்ஜநேயர் இயற்கையாகவே வேகசாலி, ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்கு வேண்டிய வேகத்தைச் சோதித்துக்கொண்டிருந்தார். வானர ச்ரேஷ்டர், அந்த ஸமுத்ரத்தைத் தாண்டுவதும் தன்னைத் தடுக்கும் சத்ருக்களை அழிப்பதும் அவருக்குப் பொருட்டல்ல. உத்தமமான மனஸையுடையவர், விசேஷமஹிமை பொருந்தினவர், ஆகையால் வெளிவிஷயங்களிலிருந்து மனஸை இழுத்து வசப்படுத்தி, தான் லங்கைக்குச் சென்று அங்கே முடிக்கவேண்டிய காரியங்களை யாவையும் தெளிவாக மனஸால் நினைத்தார்.

கிஷ்கிந்தா காண்டம் முடிந்தது

ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மௌண்ட்ரோட், சென்னை.